மே 1935. மலர் 12—இதழ் 5.

வருஷ சந்தா
ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி
அம்மாள்.

## பொங்கிய காதல் ::

அல்லது **மங்களபாரதி**

துப்பறியும் நாவல்

அதிகாரம்

15. சிறைச்சாலையின் வைபவம்—
நிரபராதிகளின் பரிபவம்
16. கருமியின் மோசம்—சிறுமியின் பாசம்
17. ஈசனின் சோதனை—நேசனின் வேதனை
18. ஏழைக்கு உதவுதல் ஆழியினும் பெரிதே!

---

இரண்டு புதிய நாவல்கள் வெளிவந்துவிட்டன

பட்டமோ பட்டம் ::
அல்லது காலத்தின் கோலம்

சுகுண பூஷணம் ::
அல்லது அற்ப புத்தியின் அவதி

…மோகினி" ஆபீஸ்
…ரடித் தெரு,
…கேணி சென்னை

12 DEC 1935
182976

வெளிவந்துவிட்டன — 2 புதிய நாவல்கள்

# பட்டமோ பட்டம்

அல்லது

# காலத்தின் கோலம்

## வேலையில்லாத் திண்டாட்டத்தின் அலங்கோலம்

படித்தும் வேலையகப்படாது திரிவதால் குடும்பங்களுக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களும், துர்ச்சகவாசஞ் செய்ய நேர்வதன் பயனாகக் கொலை, களவு, விபசாரம் முதலியனவும் செய்யத் துணிவதும், அவற்றால் அடையும் பலனும் நேரில் நடப்பது போன்று விஸ்தரிக்கப்பட்டுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் புது விதமாகச் சங்கம் ஸ்தாபித்து ஒழுங்காக நடைபெற்று, எல்லோரும் நல்ல வழியிலிருப்பதுடன், பல குடும்பங்களிலுள்ள ஊழல்களைக் களைந்து அவற்றைச் சீர்படுத்தும் விதத்தைப் படிக்க வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கும். எங்கும் நம் கண் முன் படும் இவ்விஷயத்தைப் பற்றிச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் எழுதியுள்ளது இதுவே முதல் நாவலாகும். இதில் பல திடுக்கிடும் சம்பவங்களும், துப்பறியும் சாமர்த்தியமும், ரஸமான சம்பாஷணைகளும், சிறந்த படிப்பினைகளும் நிறைந்திருக்கின்றன.

விலை அணா **10** சந்தா நேயர்களுக்கு அணா **8**

---

உத்தமத் தந்தையின் புத்திர வாஞ்சையும், பணப் பேராசை பிடித்த, அற்ப குணமுடைய உடன்பிறந்தாளின் அட்டகாஸமும், பொறுமைக்குப் பெருமை என்றும் குறையாது என்றபடி சுகுணவதியின் சாந்தமும், திடுக்கிடும் ஆச்சரிய சம்பவங்களும், இன்னும் பல அற்புதங்களும் நிறைந்த

# சுகுண பூஷணம் ::

அல்லது

# அற்ப புத்தியின் அவதி

எனும் ஸ்வாரஸ்யமான நாவல்

விற்பனைக்குத் தயார் — விலை அணா 4.

**12** அணா முன்பண மனுப்பித் தபால் செலவின்றி

2 நாவல்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

## "ஜகன்மோகினி" ஆபீஸ்.

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி சென்னை.

அசோக வனத்தில் சீதையைச் சுற்றிக் காவலிருந்த ராக்ஷஸிகளின் கூட்டத்தைப்போல இங்கு தூக்குக் கொட்டடியில் அடைத்துள்ள விசாலத்தைச் சுற்றி மூன்று வார்டர்கள் உட்கார்ந்திருந்தார்கள். விசாலம் அங்குள்ள கைதிகளின் வார்த்தைகளைக் கேட்டு வியப்புற்று இருப்பதைக் கண்ட வார்டர்களில் ஒருத்தி "நீ இன்னிக்கிப் புதுசா பாக்கவே உனக்கு என்னமோ ஆச்சரியமாயிருக்கு. எங்களுக்கு இதைக் கேட்டுத் தலை பொட்டை பறந்துபோச்சு. இவர்கள் ஜென்மமெடுத்ததே ஆயுசு பூரா ஜெயிலில் இருக்கத்தானென்று நினைத்திருக்கிறார்கள். ஒரு தரம் தப்பு செய்து தண்டனையடைந்து ஜெயிலுக்குள்ளே யிருந்தூட்டுப் போனால், மானமிருக்கிறவளாயிருந்தால் திரும்பியும் தப்பு பண்ணீட்டு வருவாளா? ஆத்தா வீட்டை விட அதிக செல்வாக்காக ஜெயிலை மதிக்கும் லோலாயிக் கழுதைகளல்லவா அவர்கள்! அதோ நிற்கும் அவள் இப்பொழுது 13-வது தடவை வந்திருக்கிறாள். அவளுக்கு உடம்பில் ஏதாவது சூடு சுரணை இருந்தால் இப்படியெல்லாம் பேசுவாளா? தனக்குப் பிறந்துள்ள ஒரே குழந்தையையும் புருஷனையும் விட்டு விட்டு அன்னிய புருஷனிடம் அன்பு கொண்டு, அந்த மயக்கத்தால் கட்டிய புருஷனின் கழுத்தை முறித்த மகா பாவி இவள். இவளுடைய செய்கையைப்பற்றிக் கேட்டால் தான் செய்த காரியத்தைப் பற்றி பெருமை பாராட்டி என்ன ஜம்பமாகப் பேசுகிறாள் தெரியுமா? அதைக் கேட்கவும் நமக்கு அவமானமாயிருக்கிறது. மானம் பிறந்த ஊரிலேயே இவள் பிறக்கவில்லை.

182926.

அதோ நின்று பார்க்கின்றாளே அந்த பரட்டைத் தலைச்சி! அவள் செய்திருக்கும் அக்ரமத்தை மனத்தில் நினைத்தாலும் உடல் நடுங்குகின்றது. பணப் பேராசையினால் பெற்ற தாயையே கையும் மெய்யும் துணிந்து கொலை செய்த சண்டாளி இவள்! இந்த ஜெயிலில் வரும்போதே அந்தப் பாவி முகத்தில் விழிக்கவேண்டுமே என்று நான் நினைப்பதுண்டு. இங்குள்ள அத்தனை பெயர்களுடைய லீலைகளையும் நீ கேட்டால் என்ன ஆச்சரியப்படுவாயோ?'' என்று சொல்லி முடிப்பதற்குள் மற்றொருத்தி "ஆமாம் போயே! உன் வேலையைச் செய்யாதே என்னமோ அளக்கறயே! இவ என்ன காந்திக்காராளைப் போல மரியாதையும் மாலையுமா, பெருமையும் புகழுமா வந்

திருக்கான்னு நெனச்சிட்டியா? ராஜாத்திங்களாட்டம் அவுங்க கொம்மாளமடிக்கிறுங்க! அவுங்கல்லா இந்த ஜெயிலுக்கு வந்தது அவுங்களுக்கு எவ்வளவோ கீர்த்தி, ஒலகமெல்லாம் மெச்சுது. இந்த காரியுமிஞ்ச கயுதே கொலே பண்ணிப்புட்டு தூக்குக் கொட்டடில்லே அடைஞ்சிருக்கு. அவகிட்ட போய் ரொம்ப ராமாயணல்லாம் படிக்கிறயே. அவளேப்போல கொலேக்காரி இவ. இவளேப்போல ஒரு கொலேக்காரி அவளாச்சு. பேசாதே கிடவேன்.'' என்று சொன்ன தானது விசாலத்தின் தேக முற்றும் ஈட்டியால் குத்தி வதை செய்வது போலாயிற்று.

''ஹா! நான் உண்மையில் கொலேப்பாதகியா? அந்தக் கிழவியை நானு கொலே செய்தேன்!...என்ன கொலே!...கொலே!!...பயங்கரமான கொலே!...ஆம்! ஆம்! நான் கொலேக்காரிதான். சந்தேகமேயில்லே. நிச்சயமாக நான் பெரும் பாதகி. பச்சைச் சிசு உலகத்தை அப்பொழுதுதான் எட்டிப் பார்க்கும்படியாகக் கடவுள் அனுப்பி வைத்த குழந்தை, கண்ணேத் திறக்காத குழந்தை, வஞ்சமறியாத சிசு, இக் கலியுகத்தின் தாண்டவமறியாதது, ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாதது. கோடிக் கணக்கில் மக்கள் தவம் செய்தும் கிடைக்கப் பெருத குழந்தை அத்தகைய அருமையான குழந்தையின் மென்னேப் பிடித்துக் கொலே செய்யச்சொல்லிய பாவியல்லவா நான்! என்னே நிரபராதியென்று நான் சொல்லிக்கொண்டால் உலகம் சகிக்குமா? கடவுள் பொறுப்பாரா? உயிரைப் போக்குவதில் பெரிய உயிராளுல் என்ன, சிறிய உயிராளுலென்ன? உயிரென்பது எல்லோருக்கும் ஒன்றல்லவா? சீ! மானம், மானம் என்றெண்ணி, குளிக்கச் சென்று சேறைப் பூசிக்கொள்வதுபோல பெரும் அவமானத்தையும், பாதகத்தையும் அடைந்தேன். இந்தப் பரந்த உலகத்தில் எத்தனேயோ இடங்களில் இம்மாதிரியான அக்ரமங்கள் நடக்கவில்லேயா? போதாக் காலத்திற்கு ஒரு பாபத்தைச் செய்து தன் வாழ்க்கையைப் பாழ்ப்படுத்திக் கொண்டதோடு விட்டிருக்கக் கூடாதா? ஐயோ! இப்பொழுது என்ன செய்வேன்? காமு போன இடம் தெரியவில்லே. அக் குழந்தை இறந்ததா, பிழைத்ததா என்றும் தெரியவில்லே. ஐயோ! யாராவது அசரீரி வாக்காக வந்து குழந்தை இறக்கவில்லே என்று சொல்லிவிடமாட்டார்களா?'' என்

றெல்லாம் தனக்குள் பலவிதமாக எண்ணி மனம் புண்ணுகிக் கண்ணீர் ஆருக வழிந்தோட, பித்துப்பிடித்தவள்போல் முகத்தில் முக்காடிட்டுக்கொண்டு அக் கதவின் பக்கத்திலேயே விழுந்துவிட்டாள்.

இதைக் கண்ட மூன்ருவது வார்டர், "நாகம்மா! நீ சொல்வது சிறிதும் சரியில்லே. அந்த வார்த்தை காதில் விழுந்ததும் இந்தக் கைதியின் நிலேமை எப்படி இருக்கிறது பார். பட்ட பழி, படாப்பழி, செய்த பழி என்று பல வகைப்பட்டது உண்டு. இவளேப் பார்த்தால் ஏதோ பெரிய இடத்துப் பெண்பிள்ளே போலவும், குற்றத்திற்கு உடந்தையாகவோ அல்லது அதை எப்படியோ தெரிந்துகொண்டோ இருக்கவேண்டுமென்று தோன்றுகிறதே அல்லாது, இவள் கையினுலேயே கிழவியைக் கொன்றிருப்பாள் என்றுதோன்றவில்லே. ஏனென்ருல் கொலே செய்தவர்களுடைய முகத்தின் களேயும், உடந்தையாக இருப்பவர்களின் களேயும், படாப்பழி ஏந்தியவர்களுடைய களேயும், எனக்குள்ள இப் பத்து வருஷத்து ஜெயில் அனுபவத்தினுல் உங்களேவிட அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

இந்த அம்மாளேயும் அடுத்த கொட்டடியி லிருப்பவளேயும், இங்கு வந்த நேரம் முதல் மாறி மாறிக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். அடுத்த அறையில் இருக்கக்கூடியவள் ஒரு கொலே அல்ல பல கொலேகளேச் செய்து, கை தேர்ந்த பக்காப் பேர்வழி என்பதை அவளுடைய முகமும் பார்வையுமே நன்ருக, தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. கொலே என்ருல் அந்த அம்மாள் கிள்ளுக் கீரையாக நினைத்துக்கொண்டிருக்கிருள் என்பதும் விளங்குகிறது. ஆகையால் மனிதர்களுடைய தாராதரத்தை அறிந்து நாம் பேசவேண்டும். நமக்கு இங்கு காவலிருக்கும் வேலேயே அல்லாது அவர்களேக் குத்திக் காட்டிப் புண்படச் செய்யும் வேலே நமக்கில்லே. அவரவர்கள் விதியை அவரவர்கள் தொலேக்கின்ருர்கள். எப்பேர்ப்பட்டவர்களாயினும் நீங்கள் இனி அப்படிப் பதட்டமாகப் பேசவேண்டாம்," என்று (ஹெட் வார்டராகிய அந்த அம்மாள்) அதிகார தோரணேயுடன் கூறினுள்.

இந்த சம்பாஷணேகளே அடுத்த கொட்டடியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த கன்னி அம்மாள், "ஏ, வார்டர் அம்மா! இதோ,

இப்படி வா! உனக்கு ரொம்ப ரொம்ப ஜோஸ்யம் தெரியராப்பலே பேசறியே. எனக்குக் கொலேன்னு வாழைக் குலே. தென்னங்குலே; பக்கத்துள்ளாற இருக்கறவளுக்குக் கொலேன்னு ஒண்ணுமே தெரியாது, பரம யோக்கியம். என்னு அவளேப்பத்தி உனக்குத்தானே ரொம்ப நாளா பழக்கம். நல்லாத் தெரியும். அவள் தொப்புளறுத்த கத்தி உங்கைலேதான் இருக்கிறது. நான் எத்தனே பேரைக் கொன்னு பிடச்சே நீ பாத்தே? என் பாத்தப்போல்லாம் நீ என்னேயே பிடிச்சிக்கிறதானே? தர்மத்துக்காகச் சும்மா விட்டுப்பிட்டியோ? ஆம். வீராகாளி எனக்கு அப்பவே சொன்னு. அவள் இப்பதானே ஜெயிலிலே யிருந்து வந்து மூணு மாதம் ஆவுது. ஜெயில்லே இருக்கிற வார்டருங்கள்ளாம் அதிகப்பிரசிங்கிங்க. தடியடி வேட்டைகூட ஆடுவாங்க. சிலதெல்லாம் வெறும் கசுமாலங்க, உதவாக் கசுமாலங்க. இப்படிண்ணு இன்னும் எத்தனேயோ சொன்னுள். எல்லாம் சரியாத்தான் போயிடுத்து. ஒரு நாளா இரண்டு நாளா? பதினுறு வருஷம் இங்கிருந்து பழகினவள் அல்ல அவ! அவகூடப் பொய் சொல்லுவாளா என்ன? உங்க பொவிசு இதோ இப்பவே எனக்குத் தெரிஞ்சு போச்சே.'' என்று தன்னுடைய யோக்யதையை நன்ருகத்தானே வெளியிட்டுக்கொள்வதுபோல ஆட்டம் ஆடி நிர்த்தனம் செய்தாள்.

அப்பொழுது மாலே நான்கு மணி சமயம் இருக்கும். இவர்களுக்கு எல்லாம் ஆகாரம் கொடுக்கும் நேரம் ஆதலால், இவர்களுக்கு ஆகாரம் தயாராக வந்துவிட்டது. கன்னியம்மாளின் திமிர் மொழிகளால் இம் மூன்று வார்டர்களுக்கும், அபாரமான கோபமும், ஆத்திரமும் பொங்கிவிட்டன. இந்த துஷ்டக் கழுதையை விலங்கிடாமல் தனியாக விட்டால் கட்டாயம் நம்மை அடித்துவிடுவாள் என்று திட்டமாகத் தோன்றிவிட்டது. ஆகையால் அவர்கள் நேரே மேட்ரனிடம் சென்று இங்கு நடந்த சகல விஷயத்தையும் எடுத்துக் கூறி அந்தக் கன்னி என்பவள் மிகவும் துஷ்டையாக இருக்கின்ருள். அவளுக்கு விலங்கிட்டால்தான் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று கூறினர்கள்.

இதைக் கேட்ட மேட்ரன் உடனே விலங்கு சகிதமாகக் கன்னியம்மாளின் கொட்டடியில் பிரசன்னமாகி, கொட்டடிக் கதவைத்

திறக்கச் செய்து கன்னியம்மாளுக்கு விலங்கைப் பூட்டச் செய்தாள். கன்னியம்மாள் விலங்கு மாட்டிக்கொள்ள மாட்டேன் என்று பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்து மேட்ரனுைம் வார்டரர்னும் நன்ருக அடி வாங்கிக்கொண்டு பலவந்தமாக விலங்கைப் பூட்டிக்கொண்டாள். இதற்குமேல் இனி என்ன செய்ய முடியும்? ஆனல் கை காலுக்கு மட்டும் விலங்கேயன்றி வாயைத் தைக்க முடியுமா? வசைமாரி பொழிந்துகொண்டே இருந்தாள்.

விசாலமோ குனிந்த தலை நிமிர வில்லை. வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஆருகத் தண்ணீர் பெருகும் கண்ணை யும் மூக்கையும் துடைத்துத் துடைத்து கண்ணும் மூக்கும் வீங்கிப் போய்விட்டன. தன் விதியை நொந்துகொள்வதும், ஈசனை வேண் டிக் கொள்வதும் தவிர வேறு என்ன செய்யக்கூடும் பாவம்! புதிதாக யாராவது ஜெயிலுக்கு வந்தார்கள் என்று காதில் கேட்டால் தன் மகளைத்தான் கொண்டுவந்துவிட்டார்களோ என்று திடுக்கிட்டு அஞ்சுவாள். அந்த விஷயத்தை மாத்திரம் கூர்ந்து கவனித்து அறிந்து கொண்டு தன் மகள் இல்லை என்பதைத் தெரிந்து கொஞ்சம் தேறுதலடைவாள்.

இப்படியே நாட்கள் ஒன்ருகி, இரண்டாகிப் பலவாகி, ஒரு மாதத்திற்கு மேலும் ஓடிவிட்டன. தன்னை இங்கு கொண்டுவந்து அடைத்ததற்குப் பிறகு தன் வாழ்க்கைப்பற்றிய விவரமோ, தன் மகளைப்பற்றிய தகவலோ, அச் சிறிய குழந்தையைப்பற்றிய செய் தியோ, தங்களுக்கு எமனுக வாய்த்த அச் சண்டாளப் பொன்னு சாமியைப்பற்றிய விஷயமோ ஒன்றுமே தெரியாமல், ஏதோ நடுத் தீவில் தனியாக ஒரு பக்ஷிபோல் திக்கு திசையின்றி அகப்பட்டுக் கொண்டிருக்கும் அபாரமான துயரத்தால் விசாலம் நாளுக்கு நாள் மெலிந்து ஏக்கம் பிடித்தவளாக ஆய்விட்டாள்.

விசாலத்தினுடைய பெருந்தன்மையான குணத்தையும் சாந் தத்தையும் கண்டு மூன்று வார்டர்களுக்கும் மேட்ரனுக்கும் அவ ளிடத்தில் "ஐயோ பாவம்!" என்ற மன இரக்கம் உண்டாயிற்று. விசாலம் தான் ஆதியிலிருந்து பட்ட கஷ்டத்தையும், தான் பிற்

காலத்திற்காக எண்ணி மனத்தில் கட்டிய கோட்டை இடிந்து பொடிந்து நிர்த்தூளியாகிவிட்டதையும் எண்ணித் தாங்கமாட்டாமல் புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்ட வார்டர், விசாலத்தை நோக்கி "ஏனம்மா, இப்படி விசனப்படுகின்றாய்? ஆண்டவன் உன் தலையில் இப்படி எழுதியிருக்கின்றான். உன்னுடைய வழக்கு விவரமோ ஒரு தகவலும் தெரியவில்லை. அதுவும் உன்னுடைய பாவந்தான். விதியை வெல்ல யாரால்தான் முடியும். வீணாக அழுது, புலம்பி உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. ஈச்வரன் உனக்கு பரிபூரண கிருபை செய்திருந்தால் உன் வழக்கில் நீ நிரபராதி என்று நிரூபித்து விடுவார். தைரியமாக இரு." என்று தேறுதல் கூறினாள்.

இதைக் கேட்ட விசாலம் அன்று வரையில் இந்த வார்டரிடம் ஒரு வார்த்தையும் பேசி அறியமாட்டாள் எனினும், அன்று அவளால் தாங்கமாட்டாத துயரத்தினால், வார்டரை நம்பிப் பேசத் துடங்கி "அம்மா! என்னைப் பொறுமையாக இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றீர்கள், உங்களுடைய புத்திமதியை நான் தலையால் வகிக்கின்றேன். எனினும் என்னுடைய மகா பயங்கரமான பாப சரித்திரத்தை நீங்கள் அறிந்தால் இப்பாவி எப்படிப் பொறுமையாக இருக்கின்றாள் என்று ஆச்சரியப்படுவீர்கள். ஆதிமுதல் இதுவரையில் நான் சந்தோஷம் என்பது இப்படி யிருக்கும் என்பது அறிந்தவளல்ல. துயரத்திற்கே ஜன்மமெடுத்த மாகா பாவியாய்விட்டேன். இதுகாறும் பட்ட அத்தனை துன்பங்களும் போதாதென்று இத்தகைய பழியும் ஒன்று எனக்கு மிச்சமிருந்ததை நினைத்தால் நான் எப்படி வருந்தாமல் இருக்க முடியும் என்று தன்னுடைய சரித்திரங்கள் முழுவதையும் சுருக்கமாக அந்த வார்டரிடம் கூறிக் கண்ணீர் விட்டாள்.

இதைக் கேட்ட வார்டர் மனமுருகிக் கண்ணீர் விடுத்து 'ஐயோ பாவமே! உனக்கென்று ஒருவரும் சஹாயத்திற்கில்லையே. இந்த வழக்கை யார் முன்னிட்டுக்கொண்டு நடத்துவார்கள். உன் குடியைக் கெடுத்த சண்டாளன் உங்களை அடியோடு துலைத்துவிட அல்லவோ வழி செய்வான்! அடாடா! மானம் மானம் என்று ஒரு

பாதக காரியம் செய்யத் துணிந்ததன் பலன் இக்கதி யாய்விட்டது.'' என்று தேறுதல் கூறிக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் ஜெயிலுக்குப் புதிதாகக் கொண்டுவரப்பெற்ற மற்றொரு கைதியை அந்த வார்டிலேயே உள்ள மூன்றாவது அறையில் போட்டுப் பூட்டுவதற்காக அழைத்துக்கொண்டு வந்தார்கள். விசனத்தினால் மெலிந்து நொந்து வாடி வதங்கி சோபை யிழந்து, நடைப் பிணம்போல காணப்பட்ட இளம் பாவையான புதிய குற்றவாளியைக் கண்ட விசாலம் தன்னை மீறி "ஹா! என் மகளே! காமு! காமு!'' என்று சத்தமிட்டு, கத்திக் கூவியபடியே, இரும்புக் கதவில் மண்டையை மோதிக்கொண்டு மூர்ச்சித்து வெட்டிச் சாய்த்த மரம் போல் தடாரென்று விழுந்துவிட்டாள்.

அதே சமயம் தன் தாயின் குரலையும், அவள் கட்டு மீறிய துக்கத்தினால் கூறிய வார்த்தைகளையும் கேட்ட காமு நெருப்பில் விழுந்த புழுவெனத் துடிதுடித்து "அம்மா! அம்மா!'' என்று வீறிட்டவாறு அவளை அழைத்துக்கொண்டு வரும் வார்டர்களே வியக்கத்தக்க வண்ணம் விழுந்துவிட்டாள். இச் சம்பவத்தைக் கண்ட அங்குள்ள எல்லோரும் வியப்பும், திகைப்பும் அடைந்து, பிரமித்து கல்லாய்ச் சமைந்துவிட்டார்கள்.

---

## 16-வது அதிகாரம்

## கருமியின் மோசம்—சிறுமியின் பாசம்

உலகத்தில் இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் ஒரு நிமிட நேரம் ஆளைத் தலை கால் தெரியாமல் புரட்டி, அதனதன் சக்திக்கு ஏற்றது போல வாட்டி, வதக்கி, வெறி பிடித்தலையச் செய்திடுவது இயல்பல்லவா? தற்சமயம் நமது கதா நாயகனாகிய ராஜசேகரனுடையு

துன்பத்திற்கு எல்லை யுண்டா? கரை புரண்டுவிட்டது. பித்தன் போலப் பிதற்றியவாறு தான் வண்டியில் கண்ட தன் காதலியின் உருவத்தைத் துடர்ந்து தலை கால் தெரியாமல் ஓடுகிறுன்.

இதைக் கண்ட ஸ்டேஷன் மாஸ்டர்..."யாரய்யா அது...இப்படி நில்லும். ஓடுகிற வண்டியைத் துரத்திச் சென்று ஏறி விபத்தை விளைவித்து விடாதேயும். நில்லும்.'' என்று கூச்சலிடுகிறுர். தாங்கமாட்டாத மன வேதனையால் குழப்பமடைந்து உருவத் தோற்றத்தைக் கண்டு பித்துப் பிடித்தவன் போல ஓடும் நிலைமையில் இம்மொழிகள் காதில் கேட்கவில்லை..." பாரதீ! பாரதீ! கண்மணி!''... என்று கூவிக்கொண்டே சென்ற வேகத்தில் எதிரிலிருந்த விளக்குத் தூணில் சட்டார் என்று முகத்திலும் தலையிலும் இடித்து ரத்தப் பெருக்கெடுத்துச் சொக்காயிலும் வழிய வாரம்பித்துவிட்டது. தக்ஷணமே 'ஹா!' வென்றலறியவாறு வெட்டிச் சாய்த்த மரம் போலக் கீழே விழுந்துவிட்டான்.

அந்த இடம் பல பேர் கூடும் ரயிலடியாகையினுல் உடனே ஏராளமான ஜனங்கள் கூடி "ஐயோ! யாரோ் ஒரு வாலிபன் நல்ல அடிபட்டு விழுந்துவிட்டானே'' என்ற கூக்குரல் கிளம்பிவிட்டது. சிலர் நமது ராஜசேகரனைத் தூக்கி அவன் நெத்தியிலிருந்து கொட்டும் ரத்தத்தைத் துடைத்துத் தண்ணீர்விட்டுக் கழுவினுர்கள். ரத்தம் பிரவாகமாகச் செல்வதால் ஒரு துணியைப் போட்டு இறுகக் கட்டி விட்டு அவனை உடனே அவ்வூரிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டுச் சிகிச்சை செய்தார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ராஜசேகரன் கண்ணைத் திறந்து பார்த்தான். தான் ஆஸ்பத்திரியில் தலைக்குக் கட்டுடன் படுத்திருப்பதை தானே ஒரு விநாடியில் யூகித்தறிந்துகொண்டான். வலியின் உபத்திரவம் அதிகரித்து வருத்துகிறது. தான் எண்ணியதொன்று, கண்டதொன்று; நடந்த முடிவு ஒன்று; தற்போது நோயாளியாகிப் படுத்ததொன்றுமாக ஆய்விட்டதை எண்ண அவனுல் வருந்தாதிருக்க முடியுமா! தன் மனத் துயரத்தை யாரிடம் தெரிவிப்பது? எல்லா எண்ணங்களும் சிதறிவிட்டதால் கண்ணீர் பெருகியவாறு படுத்துவிட்டான்.

ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர், ராஜனை நோக்கி "ஐயா! தாங்கள் மூன்று தினங்கள் வரையில் இங்குதானிருக்கவேண்டும். ஏனெனில் இரும்புக் கம்பம் இடித்த வேகத்தில் நெத்தியில் சதை கிழிந்துவிட்டது. இப்போது தையல் போட்டிருக்கிறேன். அது நன்றாகக் கூடிய பிறகு பிரித்துவிடலாம்; அதன் பிறகுத்தான் நீங்கள் போகவேண்டும். ஒருக்கால் அதன் மத்தியில் ஏதாவது தொந்தரவு நேருமாயின் நாங்கள் அவ்வப்போது கவனித்துக்கொள்வோம். ஆதலால் சவுகரியமாக இங்கேயே இருங்கள். நாங்கள் வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்கிறோம். உங்கள் மனிதர்கள் யாரேனும் அருகில் இருந்தால் சொல்லியனுப்புவதாயின் அனுப்புங்கள்" என்று அன்புடன் கூறினார்.

182976

இதைக் கேட்ட ராஜசேகரன் "ஐயா! நான் இவ்வூரல்ல. வெளியூரிலிருந்து ஓர் முக்ய காரணமாக வந்தேன். வந்தவிடத்தில் என் போதாக் காலக் கொடுமையால் வந்த காரியமும் ஜெயமாகவில்லை. இந்த விபத்தும் வந்துவிட்டது. நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது...உம்......ஈசன் விட்ட வழியாகிறது." என்று கூறிவிட்டான். வலி யொருபுறம், கவலை யொருபுறம் பாதிக்கக் கண்ணை மூடிக்கொண்டு படுத்துவிட்டான். கடல் அலைகளைப்போல் பொங்கிக் கொந்தளித்து வரும் எண்ணங்களும் கவலைகளும் யோசனைகளும் ஒன்றன்பின் ஒன்றாக வருத்துகின்றன. பெருமூச்சு துரத்துகிறது. என்ன செய்வான் பாவம்!

* * * *

ராஜசேகரனை விட்டு காமு, பாரதி முதலியவர்களிடம் செல்வோம். அட்டகாஸமாக வந்த மருமகப்பிள்ளையையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கண்டு வள்ளியம்மாளுக்கும் சற்று மனம் பதறிவிட்டது. காமு அம்மட்டும் விடாது இன்னும் கண்டபடி அவன் அக்ரமங்களை வெளியிட்டுத் திட்டியவாறு வள்ளியம்மாளின் முன்பு வந்து "பாட்டீ! இந்த மனிதன் சாமானியப்பட்டவனல்ல. இவனைக் கண்டு மோசம் போய்விடாதீர்கள்.

பெண்களின் கற்பை உறிஞ்சும் பொருட்டே ஜென்மமெடுத்துள்ள அற்பப் பதர் இவன். இந்தப் படுபாவியினால் அழிந்த குடும்

பங்கள் கணக்கிட முடியாது. மானமிழந்த பெண்களின் எண்ணிக்கை கூறவே முடியாது. இப் படு மோசக்காரனை விரட்டித் தள்ளுங்கள். அனியாயமாக ஓர் அனாதைப் பெண்ணை இப் பைசாசத்தின் கையில் கொடுத்துக் கொலை செய்யாதீர்கள். பேதைப் பெண்ணைக் காப்பாற்றுங்கள்.'' என்று கதறினாள்.

இதுவரையில் தனக்கு வலுவில் ஓர் பெண் தேவதை ;கிடைக்கப்போவதாக எண்ணி ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டிருக்கையில் இந்த எதிர்பாராத விதமாக காமு தோன்றி வசைமாரிகள் பெய்வதைக் கண்டு அபாரமான அதிர்ச்சி யுண்டாகிக் கலங்கினான். சில விநாடி நேரம் தம்பித்துவிட்டான். காமுவின் ஆவேச மொழிகளைக் கேட்டு அவனுக்கு அளவு மிஞ்சிய ஆக்ரோஷமும் கோபமும் உண்டாகிவிட்டன.

ஆவேசத்துடன் எழுந்து "சீச்சீ! பேமானிக் கழுதை! இந்த சாகஸம் யாரிடத்தில் செய்கிறாய். உன்னுடைய பரம விகாரமான ஊழலை மறைக்க என்மீது அபாண்டத்தைக் கூறுகிறாயா! பாட்டி! இந்த கெட்டுப்போன கழுதையின் வார்த்தையைக் கேட்காதீர்கள். என்னுடைய நண்பனொருவனை இவள் மோசம் செய்து அவன் பொருளனைத்தையும் பறித்துக்கொண்டு கடைசியில் அவனைச் சந்தியில் விட்டுக் கொன்றுவிட்டாள். விவாகமாகாத கன்னிகை இவளுக்கு ஒரு குழந்தையும் கள்ளத்தனமாகப் பிறந்துவிட்டது.

இந்த பரம விகாரமான ரகஸியங்களை எல்லாம் நான் அறிந்தவனாகையினால் என்மீது இவளுக்கு மகத்தான ஆத்திரமும் கோபமும் பயமும், என்னைக் காணும்போதே உண்டாகிவிட்டதால் தன்னுடைய ஊழலை எங்கு வெளியிட்டு மானத்தை வாங்கிவிடுவேனோவென்கிற பயத்தினால் என்மீதே முதலில் மூட்டையை அவிழ்த்து தனது துர்க்கந்தத்தை மறைக்கப் பார்க்கிறாள். ஆகா! இந்த சாகஸமா செய்கிறாய். நானா இவைகளுக்கு ஏமாறுபவன். என் ஆப்த நண்பனின் ஆவி உன்னால் பிரிந்து வருந்தும் வினை உன்னை வெறுமனே விட்டுவிடுமா! ஊம். மோசக்காரக் கள்ளி'' என்று அபாண்ட பழியைப் போட்டுப் பெரிய சத்தமிட்டாள்.

கல்யாண மாப்பிள்ளை வந்திருக்கும் செய்தியைக் கேட்டதும் அந்த பட்டிக்காட்டு ஜனங்களின் ஆரவாரத்தைக் கேட்கவேண்டுமா? கூட்டங்கூட்டமாக வந்துவிட்டார்கள். வந்த விடத்தில் நடக்கும் இந்த சண்டையைக் கண்டு எல்லோரும் கை கொட்டி நகைத்து ஓரே பெரளி செய்து அமளியாக்கிவிட்டார்கள்.

வள்ளியம்மாளுக்கு எல்லாங் கிடக்க எருதின் மீது கோபமாம் என்பதுபோல அந்த அமர்க்களத்திற்கெல்லாம் காரணம் நமது உத்தமியான பாரதிதான் என்று அப்படிப் பாய்ந்துவிட்டாள். அழுகக் குட்டி தள்ளியவளும் விபசாரியும் உனக்கு வினைகிதியா! அவனை நீ வேண்டுமென்றே வரவழைத்திருக்கிறாய் என்பதை நான் இன்னமும் அறியவில்லை என்று நினைக்கின்றாயா! அடி ஸாகஸக்கள்ளீ! உன்னுடைய சூழல்களைக் களைந்து உன்னைச் சரிப்படுத்தும் பொருட்டு நான் இங்கு இழுத்துக்கொண்டு வந்தும் நாயின் புத்தியைப் போல உனது கதியும் ஆய்விட்டதே! அடி கழுதை! இந்த பூச்சி மிரட்டலுக்கு நானா பயப்படுகிறவள் ஊம்...என்று அந்த அபலையைத் தாக்கிப் பேச வாரம்பித்தாள்.

இந்த அலங்கோலப்பட்ட நிலைமையைக் கண்டு எல்லோரும் பலவிதமாகப் பேச வாரம்பித்துவிட்டார்கள். மாப்பிள்ளை வீட்டார் வந்தவர்கள் மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டார்கள். செல்லும்போது மாப்பிள்ளைச்வாமி கடுங்கோபங்கொண்டு "ஏ கிழப்பிணமே! இரு இரு. உனது கேடு காலத்திற்குத்தான் நீ எங்களை வரவழைத்து இப்படிப்பட்ட அவமரியாதையையும் அவமானத்தையும் செய்தாய். உன்னையும் இவர்களையும் இலேசில் விடப்போகிறேனா பாருங்கள். இத்தனை அகம்பாவமா உங்களுக்கு? என்னை என்ன சாமானியனென்று எண்ணிவிட்டாயா! எங்க சித்தப்பன் பெரிய போலீஸ் அதிகாரி. எங்க மாமன் உயர்ந்த பெரிய வக்கீல். என்னைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரும் சாமானியர்களல்ல. உங்கள் மூவரையும் சரியான வழியில் பழிக்குப்பழி வாங்குகிறேன்." என்று கறம் வைத்துக் கூறிக்கொண்டே போய்விட்டான்.

இந்த விபரீதமான பயங்கர வார்த்தையைக் கேட்ட எல்லோருக்கும் தூக்கி வாரிப் போட்டது. கிழவியின் நிலைமை அசல் கொள்ளித் தணலாகிவிட்டது. ஏற்கெனவே தாடகி ஸ்வரூபமுடைய கிழவி விச்வரூபமே எடுத்துவிட்டாள். "ஊம் இந்த குட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறுயா இல்லையா? மானங் கெட்டவளே! ரோஷங் கெட்டவளே! பேமானிக் கழுதை. பெண் ஜென்ம மெடுத்தும் புத்தி கெட்டுப் பாழாகிய உன் முகத்தில் விழித்தாலும் பரம பாதகம் உண்டாகும்" என்று தடபுடலாக இரைந்து காமுவின் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிருள்.

நமது அருமைக் குண பூஷணியாகிய பாரதிக்கோ இந்த கதை முற்றிலும் பொய்யானது என்று நன்றுகத் தெரியுமாதலால் அவளால் இந்த கொடுமையைச் சகிக்க முடியவில்லை "பாட்டி! ஏற்கெனவே நொந்தும் மனம் புண்ணுகித் தவிக்கும் இவளை நீங்கள் அக்ரமமாகத் திட்டாதீர்கள். இந்த பெண் ஒரு பாபமும் அறியாத நிரபராதி என்பதை ஈசன் அறிவான். இவளை வேண்டுமென்று அப் பாவி பழித்து இழித்துக் கூறி யிருக்கிருன். அது அத்தனையும் சுத்த புளுகு மூட்டை யாகும். ஐயோ பாவம்! பாட்டி! இவளை அனியாயமாகத் துரத்தாதே: நான் சாப்பிடும் ஒரு வாய்!சாதத்தை அவளுக்கும் பகிர்ந்து கொடுத்து சாப்பிடுகிறேன். நீ தயவு செய்து பேசாம லிருக்கவேண்டும்" என்று தன்னை மீறிய வாஞ்சையுடன் கெஞ்சிக் கேட்டாள்.

இதற்குள் பொறுமை முற்றும் இழந்த கிழவி பாரதியை ஓர் சிறிய பெண் போல எண்ணி பட்டார் பட்டார் என்று தலை கால் தெரியாது அடித்து "அடீ பாவிப் பெண்ணே! உன்னை நான் அழைத்து வந்தது இத்தகைய அவமானமும் சிறுமையும் படுவதற்குத்தானு ஆயிற்று. என் மானம் போகிறதே! என் மதிப்பெல்லாம் போய்விட்டதே! ஐயோ! நான் இனி தலை காட்ட யோக்யதை இல்லாது செய்துவிட்டாயே: என்ன செய்வேன்?" என்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு பெருத்த ஆர்ப்பாட்டம் செய்தாள்.

அவ் வூரிலிருக்கும் சில கிழங்கள் (வள்ளியம்மாளுக்கு உறவி

னர்கள்) வள்ளியம்மாளோடு சேர்ந்து ஒத்துப் பாடி தாளந் தட்டிய வாறு "வள்ளீ! ஒன் தலே விதிடி யம்மா! விதி. இந்த ஊர்ச் சனியன்களே எல்லாம் கொண்டுவந்ததன் பலன் உன்னே கேவலம் பஞ்சமப் பிண மாக்கிவிட்டது. ஒண்டிக் கட்டையாக அனுதை முண்டெயாக அல்லாடிக் கொண்டிருந்தால் உன்னே யாரும் மதித்து ஜாதியிலும் சேர்க்கமாட்டார்கள். உன் ப்ராணன் போகிற சமயத்தில் கூட உனக்கு ஒரு வாய் தண்ணீர் கொட்ட யாரும் வரமாட்டார்கள். அனுதைப் பிணமாகிவிட்டாய். உன்னே மோசம் செய்து பாழாக்கத் தான் இந்த சனியனே இழுத்துக்கொண்டு வந்தாய்.'' என்று ஒப்பாரி வைத்து அழத் தொடங்கிவிட்டார்கள்.

இன்னும் சிலர் " அம்மா! வள்ளீ! நம்முடைய இந்த ஊர் ஜனங்கள் மாசு மருவு இன்றி வாழ்ந்ததற்கு இப்போது உண்டாகிய அழுக்கு போதும். இனியும் தாமதம் செய்யாதே: இந்த தட்டு வாணி குச்சுக்காரியுடன் இவள் எப்போ சினேகிதை என்ருளோ அப்போதே இவள் யோக்யதை நன்ருகத் தெரிந்துவிட்டது. இனி யுந் தாமதம் செய்யாமல் இந்த சனியன்களே யனுப்பித் தொலேத்து விடு. வைத்துக் கொள்ளாதே: சத்பாத்திரங்களுக்கு இடங் கொடுக் கலாம். அசத் பாத்திரங்களே அடியோடு துலேக்க வேண்டாயா? கொலேகாரியும் குடிசெட்டியும் வந்து உறவாடினது போதும் என்று பெரிய ஆட்டம் ஆடினர்கள்.

இதைக் கேட்ட வள்ளியம்மாளுக்குத் தலே கால் தெரியாமல் கோபம் மிஞ்சிவிட்டது. சாகிற காலத்தில் எனக்குள்ள சங்கடம் போதும் அவமானம் போதும். நான் தலேப்பை உதறித் தலேமீது போட்டுக்கொண்டு ஓடிப் போகிறேன். எங்கேனும் கிணற்றில் குளத் தில் விழுந்து சாகிறேன். என்னே உதவாக்கரைப் பிணமாக்கிவிட்டாய். இனி நான் எங்கு சென்று பிராயச்சித்தம் செய்துகொண்டாலும் என் மனம் நிம்மதி யடையாது. உடனே நீங்களிருவரும் புறப்பட் டுப் போய்விடுங்கள். இங்கு நிற்கவேண்டாம்...என்று பெரிய அதிர் வெடி போடுவது போலக் கூறினள்.

காமு கண்ணீர் பெருகியவாறு பாரதியின் முகத்தைப் பரிதாப கரமாகப் பார்க்கிருள். பாரதியும் காமுவின் குழந்தையை வைத்

துக்கொண்டு கண்ணீர் விடுகிற காட்சி பசையற்ற மனிதக் கூட்டத்திற்குத் தெரியப் போகிறதா! இதைக் கண்டு பரிகஸிப்பாரும் ஏளனமாகப் பேசி நகைப்பாரும் முகத்தைத் திருப்பிக்கொள்வோருமாக இருக்கிறார்கள்.

"அம்மா பாரதி! நான் செல்கிறேன். என் தலைவிதியுள்ளபடி யாகட்டும். என்னால் உனக்கு வந்த அபக்யாதி போதும். என் விதி என்னை யாதரிப்போரையும் தாக்குகிறது." என்று கண்ணீர் பெருக, உள்ளம் உருகத் தன் குழந்தையை வாங்கிக்கொண்டு மெல்ல நடக்க வாரம்பித்தாள்.

இதற்குள் வள்ளியம்மாள் "போதுமடீ உன் சாகசம்! போதும்; போதும். வெட்கமில்லாது இக் குட்டியையும் தூக்கிக் கொண்டு வந்துவிட்டாயே! இந்த அழகிற்கு அழுகையும் மூக்கைச் சிந்தலும் ஒரு கேடா?" என்று திட்டினாள். திரும்பிப் பார்க்காமல் காமு போய்விட்டாள்...

அந்தோ! அச்சமயம் அவள் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? தன்னையே தான் நொந்துகொண்டு வெறுத்தாள். குழந்தையின் தெளிந்த முகத்தை நோக்குகையிலோ வயிற்றைப் பற்றி எரிகிறது. இந்நிலைமையில் தானும் குழந்தையும் இவ்விதம் பல விடத்திலும் அவமானப்பட்டுக் காரி யுமிழ்ந்து எத்தனை நாளைக்கு உயிர் வாழ முடியும். எங்காவது விழுந்து இறந்துவிடலாமா: என்றும் துணிகிறாள்.

தன்னை இக் கதிக்குக் கொண்டுவந்த வஞ்சகப் பாவியே தனக்குக் கடைசீ வரையில் எமனாக விருந்து தனக்கு த்ரோகம் செய்யும் அப் பாதகனின் செய்கையை எண்ண அங்கம் பதறுகின்றது. தனக்கு இம்மாதிரி விதி யமைந்ததற்குத் தன் புத்தி பிசகி அவனை நம்பி விட்டதும் சேர்ந்ததாகையினால் எந்த விதமும் நகரமாட்டாது தத்தளித்தவாறு சென்றுகொண்டே இருக்கிறாள். நம்மைப் படைத்த கடவுளே நம்மைப் பல விதத்திலும் சோதித்துவிட்டார். அவரால் படைக்கப்பட்ட மக்களும் நம்மைப் பலவிதத்திலும் அவமானஞ் செய்து வாட்டி வருத்துங் காலத்தில் அவராலேயே படைக்

கப்பட்ட இச் சூரிய பகவான் மட்டும் எப்படி தன்னுடைய தீக்ஷண்யத்தை மறைத்துக்கொண்டு குளிர்ச்சியைக் கொடுக்க முடியும்? மகா கொடிய பாவத்தைச் செய்த என்னை எவ்வளவு தகித்தாலும் போதாது.'' என்று தனக்குள் பலவாறு எண்ணியபடியே ஒரு மரத் தடியில் களைத்து குழந்தையுடன் உட்கார்ந்தாள். பொட்டுப் பாலுக்கும் கதியின்றி, தாய்ப் பாலுக்கும் விதியின்றிக் கிடக்கும் அக் குழந்தையோ கர்ற கர்ற வென்று கையில் நிற்காமல் கத்துகின்றது. எவ்வழியில் அக் குழந்தையின் பசியைச் சமனஞ்செய்ய முடியும்? காலமோ அகாலம். மணியோ பன்னிரண்டாய்விட்டது. அச்சமயம் கோயிலில் பெரிய மணி அடிக்கும் சப்தம் எங்கிருந்தோ கேட்டது. அந்த மணியின் நாதம் அவளது மனப் பிணியை நீக்கி ஆறுதல் கூறுவது போன்று தோன்றிற்று. கணமும் தாமதமின்றி தன்னுடைய முந்தாணியில் இரண்டு முழங்கள் கிழித்து, அதைக் காலில் நன்றாக — சூடுண்டாகாதிருப்பதற்காக — சுற்றிக்கொண்டு குழந்தையைத் தூக்கிக்கொண்டு பித்துப் பிடித்தவள் போல மணியின் ஒலி வந்த திக்கை நோக்கி ஓட வாரம்பித்தாள்.

அச் சமயம் அக்கோயிலில் உச்சி காலப் பூஜை வேளை யாகையால் அநேக பக்தர்கள் அங்கு கூடி இருந்தார்கள். தன் பசியின் கொடுமையும், தன் குழந்தையினது பசியின் கொடுமையும் ஒன்று சேர்ந்து, பலமான மனத் தாங்கலைக் கொடுத்துவிட்டதால் லஜ்ஜையையும் மறந்தாள். வெட்கத்தைத் துறந்து "அம்மா! இந்த குழந்தைக்கு ஒரு வாய் பால் கொடுங்களேன். தர்ம தேவதையே! ஒரு ஜீவனைக் காப்பாற்றுங்கள் தாய்மாரே! பசியினால் குழந்தையின் உயிர் போய்விடும் போலிருக்கிறது. இப் பச்சைக் குழந்தையின் பசியைத் தீர்த்தால் கடவுளின் அபாரமான கருணை உங்கள் பால் சுரக்கும். தயவு செய்ய வேண்டும்'' என்று கெஞ்சி, மிகவும் பரிதாபகரமாகக் கேட்டாள்.

இதைக் கேட்ட அங்குள்ளோரில் சிலர் ஏளனமாக நகைத்து "போடீ வெட்கங் கெட்டவளே! குழந்தையை வைத்துக்கொண்டு பிச்சை யெடுப்பதற்குத்தான் அதைப் பெற்றாயோ? எங்கேனும்

கூலிக்கு வேலை செய்வதுதானே. இடிமோந்தடி போல் இருக்கின்றீயே!'' என்று நெஞ்சில் சிறிதும் பசையற்றுக் கூறினர்கள்.

சுமார் 7 அல்லது 8 வயது மதிக்கக்கூடிய ஓர் சிறுமி அங்கு மற்ற சிறுமிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவள், திடீரென்று இக் குழந்தையின் அழுகைக் குரல் கேட்டு காமு விடத்தில் ஓடோடி வந்து தன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த மற்ற சிறுமிகளையும் பார்த்து, “ஓடி வாருங்கள். ஓடி வாருங்கள். சின்ன பாபா. எவ்வளவு அழகா யிருக்கு பாரு. ஐயோ பாவம்டீ! அழறது. மாமீ! இந்த குழந்தையை என் கிட்ட குடுங்கோ மாமீ! எனக்கு கொழந்தேன்னு ரொம்பவும் இஷ்டம் மாமி!'' என்று தன்னுடைய அபாரமான சந்தோஷத்தைத் தெரிவித்து இரண்டு கைகளையும் நீட்டினள். இச் சிறுமியின் செய்கையைக் கண்ட காமுவுக்கு மலைக் குவியல் போன்ற விசனத்தினிடையே பளிச்சென்று ஒரு மின்னல் தோன்றுவது போலத் தன்னை யறியாது சிறிது சந்தோஷம் உண்டாயிற்று. இந்த ஆலயத்தி லிருக்கக்கூடிய சாக்ஷாத் ஈசுவரியே இச் சிறு பெண் வடிவாக வந்தாளோ வென்று ஆச்சரியப்பட்டாள்.

உடனே கோகிலம் என்ற அச் சிறுமியை முதுகில் தடவிக் கொடுத்து, மோவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு, “குழந்தாய்! இதோ இந்த குழந்தையை உன்னிடம் தருகின்றேன். உன் னிஷ்டம் பூர்த்தியாகும் வரை நீ வைத்துக்கொண்டிரு. இக் குழந்தைக்குப் பசி அதிகமா யிருக்கிறது. அதனல் அழுது களைத்துப் போய்விட்டது. நீ உன் தாயாரைக் கேட்டுக் கொஞ்சம் பால் கொண்டுவந்து கொடு. அதை குழந்தைக்குப் போட்டிவிட்டு உன்னிடம் குழந்தையைத் தருகிறேனம்மா'' என்று மிக கெஞ்சலாகக் கேட்டாள்.

இதைக் கேட்ட அச் சிறுமி மிகவும் சந்தோஷத்துடன் “மாமீ! எங்கள் வீட்டில் 2 பசு கறக்கின்றது. இதோ ஒரு லோட்டா நிறைய பால் தருகிறேன். வாருங்கள் மாமீ! எதிர் வீடுதான்.'' என்று காமுவின் கையைப் பிடித்திழுத்தாள். இதைக் கேட்ட காமு அச் சிறுமியின் அன்பைக் கண்டு மெச்சி “குழந்தாய்! நான்

அங்கெல்லாம் வரவில்லை. இதோ இந்த மண்டபத்திலேயே உட்கார்ந்திருக்கிறேன். நீ சென்று பாலை இங்கு கொண்டு வந்துவிடு. எந்த இடத்திற்கும் வருவதற்கு எனக்கு வெட்கமா யிருக்கிறது." என்றாள்.

உடனே அச்சிறுமி தன் சிநேகிதைகளுடன் ஓட்டமாக வீட்டிற்கு ஓடி அடுத்த நிமிடம் ஒரு கோப்பை நிறைய பாலும், ஒரு பாலடை, 2 இளநீர்த் தேங்காய், ஒரு கத்தி முதலியவற்றையும் ஆளுக்கொன்றாக எடுத்துக்கொண்டு அபரிமிதமான சந்தோஷத்தோடு ஓடி வந்து "மாமி இந்தாங்கோ! இந்தாங்கோ! எங்கம்மா படுத்துண்டு தூங்கிண்டிருந்தாள். பானையிலிருந்து பாலை நானே கொட்டிக்கொண்டு வந்துவிட்டேன். இந்த குழந்தைக்குப் போட்டிவிட்டு நீங்களும் சாப்பிடுங்கள் மாமி" என்று சிரித்துக்கொண்டே கூறியவாறு குழந்தையின் தாடையை தடவிக்கொண்டிருந்தாள்.

காமு.—அம்மா! உன் தாயாருக்குத் தெரியாமல் நீ இப்படிக் கொண்டு வருவது தப்பாயிற்றே. உன் தாயார் எழுந்த பின் பால் எங்கே என்று கேட்டால் நீ என்ன செய்வாய்? உன் தாயாரையோ பெரியாரையோ கேளாது ஒரு காரியமும் நீ செய்யக்கூடாதம்மா. நீ இவைகளை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போய், "ஒரு பிச்சைக்காரக் குழந்தை வந்திருக்கிறது. அதற்கு இந்த பாலைக் கொடுக்கட்டுமா?" என்று கேட்டுக்கொண்டு வாம்மா!

கோகிலம்.—மாமீ! நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் எது செய்தாலும் எங்கம்மா, எங்கப்பா என்னை கோபித்துக் கொள்ளவே மாட்டார்கள். நான் துஷ்ட காரியம் ஒன்றும் செய்ய மாட்டேன். ஆதலால் என் பெற்றோர்கள் எனக்கு ஸ்வதந்த்ரம் கொடுத்திருக்கிறார்கள். எங்கம்மா எழுந்தவுடன் உங்களையே நேரில் வந்து விசாரிப்பார்கள் பாருங்கள்.

அதன் பிறகு காமு குழந்தைக்கு வயிறாரப் பாலை வார்த்து விட்டுக் கோகிலாவிடம் கொடுத்தாள். குழந்தையை வாங்கிக்கொண்ட கோகிலத்தின் சந்தோஷத்தைக் கூறவும் வேண்டுமா? அத்தனை சிறுமிகளும் குழந்தையை சுற்றிக்கொண்டார்கள். ஒவ்வொரு சிறு

மியும் "அடீ. என் தம்பி சாயலா இருக்கு. அழகா இருக்கு. சேப்பா யிருக்கு பாத்தியா'' என்றெல்லாம் தத்தம் சந்தோஷத்தைத் தெரிவித்துக் குழந்தையை உடம்பு முழுதும் முத்தமிட்டாள்.

காமு சிறமிகள் கொணர்ந்த பாலையும், இளநீரையும் அருந்தித் தன் பசியை ஆற்றிக்கொண்டாள். பசியினால் மிகவும் காய்ந்து போயிருந்த குடலுக்கு சில்லென ஆகாரம் விழுந்தவுடன் தன்னை மீறிய களைப்பு மேலிட்டு அப்படியே படுத்துக்கொண்டாள்.

சிறமிகளும் குழந்தையைக் கீழே விடாமல் குழந்தை தூங்கும் போதும் அதை கொஞ்சிக்கொண்டே இருந்தார்கள். இந்த மண்டபத்தில் சிறமிகளெல்லாம் குழந்தையை வைத்துக்கொண்டு குலாவுவதையும், அங்கு ஒருத்தி படுத்திருப்பதையும் வழியோடு போகும் பொது ஜனங்கள் ஒரு வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டே சென்றார்கள்.

கோகிலத்தின் தாயார் வெகு நேரமாக தன் பெண்ணைக் காணாமையால் அவளைத் தேடிக்கொண்டு கோயில் பக்கம் வந்தாள். மண்டபத்தில் கூட்டமிருந்ததால் அங்கு வந்தாள். தன் தாயைக் கண்டவுடன் கோகிலம் வெகு ஆவலாகக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு தன் தாயினிடம் ஓடி வந்து, "அம்மா! அம்மா! இந்த குழந்தையைப் பார்த்தாயாம்மா! எவ்வளவு அழகாயிருக்கிறது! அதோ படுத்திருக்கிறாளே அவளுடைய குழந்தைம்மா இது. ஐயோ பாவம். ரொம்ப ஏழை. குழந்தை பசியினால் ரொம்ப அழுதது. நம்ம வீட்டிலேந்து பாலும், அந்த அம்மாக்கு இளநீரும் கொண்டுவந்து கொடுத்தேன். யார் பசி என்று கேட்டாலும் உடனே ஆகாரம் கொடுக்கவேண்டும் என்று நீயும் அப்பாவும் சொல்லியிருக்கிறீர்களோல்லியோ? அதனால் உடனே கொடுத்தேன். அதை சாப்பிட்டு இருவரும் பசியாறினார்கள் அம்மா! அம்மா! இந்த குழந்தையை விட எனக்கு மனஸே வல்லேயேம்மா! இதை நம்ம வீட்டிற்கே எடுத்துக்கொண்டு போய்விடுவோம். இதோடயேதான் விளையாடிக்கொண்டு சந்தோஷமாக இருப்பேனம்மா. என்னம்மா பேசாம நிக்கறயே. பதில் சொல்

லும்மா. இந்த பாபா எனக்குக் கட்டாயம் வேண்டும்மா.'' என்று மழலையாக கெஞ்சிக் கொஞ்சிக் கேட்டாள்.

தன் மகள் சிறியவளாயிருந்தபோதிலும் பார யோசனையுடன் இவ் வேழைகளுடைய பசியை ஆற்றியதற்காக மிகவும் சந்தோஷ மடைந்த கோகிலத்தின் தாயார் கோகிலத்தை தட்டித் தடவிக் கொடுத்து "செல்வி! உன்னுடைய செய்கைக்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இக் குழந்தை உனக்கு வேண்டுமென்கி ருயே. அவர்கள் யாரோ, எங்கு போகின்ருர்களோ. ஒன்றும் தெரி யாதே. உனக்கு எப்படி அக் குழந்தை கிடைக்கும். ஐயோ பாவம், பச்சைக் குழந்தை. கருவண்டுபோல் கண்ணும், கருப்புக் குல்லாய் போட்டதுபோல் தலை மயிரும், குண்டு முகமும், அழகாகப் பார்க் கும் பார்வையைக் கண்டால் எனக்கே ஆசை உண்டாகிறது'' என்று தனக்குள் சொல்லியவாறு அக் குழந்தையை வாங்கிக் கொண்டே முத்தமிட்டாள்.

அதுவரையில் அயர்ந்து தூங்கிவிட்ட காமு, திடுக்கிட்டு எழுந்தாள். மஹாலக்ஷ்மி போன்ற ஒரு அம்மாள் தன் குழந்தையை முத்தமிடுவதைக் கண்டு அந்த அம்மாளின் முன் சென்று நமஸ்கா ரம் செய்து "தாயே! தங்களுடைய தயவினுல் இவ் வனுதைக் குழந்தை இன்று பிழைத்தது. தங்கள் புதல்வியின் அபார அன் பைக் கண்டு உள்ளம் பூரித்துவிட்டேன். என் துயர மெல்லாம் விடிந்துவிட்டதாக நினைக்கின்றேன்.'' என்று மேலே பேசமாட்டா மல் கண்ணீர் பெருக நின்றுவிட்டாள். இதைக் கண்ட கோகிலத் தின் தாயார் "அம்மா! கண்ணீர் விடாதே! உன்னைப் பார்த்தால் மிக வும் நொந்துபோனவள்போல் தோன்றுகின்றது. விதி யாரை விட் டது. நீ என் வீட்டிற்கு வா. அங்கு பேசிக்கொள்வோம்.'' என்று அன்பாகக் கூறி காமுவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று காமுவின் யோக க்ஷேமங்களை விசாரித்தாள்.

காமுவிற்கோ தன்னுடைய வெட்கக் கேடான சரித்திரத் தைக் கூறுவதற்கு கூச்சமாயும், பயமாயும் இருக்கிறது. ஆனல் தன்னிடத்தில் உண்மையான பிரீதியைக் காட்டும் அந்த அம்மா

ளிடத்தில் பொய்யான கட்டுக் கதையை உரைப்பதற்கும் மனம் வரவில்லை. ஈசனே தன் தலையில் அப்படி எழுதிவிட்டபோது அதை மறைத்துக் கூறினால் பலன் உண்டா என்று மனம் துணிந்து தன்னுடைய சரித்திரம் முழுதும் ஒன்று விடாமல் ஆதியோடந்த மாய்க் கூறி "தாயே! நான் மஹா பாவி. என்னுடைய சரித்திரத் தைக் கேட்டு நீங்கள் என்னை வெறுக்கலாம். என்னுடன் பேசுவதற் கும் அஞ்சலாம். ஆனால் நான் கடவுளறிய நம்பி மோசம் போன ஒரு பாவத்தைத் தவிர வேறொன்று மறியமாட்டேன். என் புத்தி பிசகிய அன்றே என் வாழ்நாள் ஒழிந்தது. அன்றே நடைச்சவ மானேன். இப் பச்சைக் குழந்தையின் பொருட்டுப் பாழும் உயி ரைச் சுமக்கின்றேன்." என்று கண்ணீர் அருவி போல பெருகக் கூறினாள்.

இதைக் கேட்ட அந்த அம்மாள் உண்மையிலேயே மனது இளகிக் கண்ணீர் பெருக "அம்மா! போதும். நிறுத்து. நான் உன் நிலைமையை முற்றும் தெரிந்துகொண்டேன். இப் பரந்த பூமியில் பெண்கள் கற்பை உறிஞ்சும் கிராதக ராக்ஷஸர்கள் போன்ற—குடி யைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் போன்ற—சில ஆடவர்கள் பாம்பின் விஷத்திலும் கொடிய விஷம் போன்று ஜெனித்துள் ளார்கள். அம்மா! அழகிலும், அறிவிலும், மற்ற சகல அம்சத்தி லும் எத்தனையோ மேன்மையாக விளங்கிய என் உடன்பிறந்த சகோதரி ஒருத்தி உன் போலவே அற்ப விஷயத்தில் தன் அபார புத்தியைப் பறி கொடுத்து சொந்த தாய்மாமனாலேயே நம்பிக்கைத் துரோகத்திற்குப் பாத்திரமாகிப் பின்னர் தன் அறிவிழந்த தன் மையை உணர்ந்து இவ்வூர் குளத்திலேயே தன் வாழ்வை முடித்துக் கொண்டாள்.

அம்மா! இதே விஷயத்திற்காக அருமையான ஒரே சோதரி யைப் பறி கொடுத்துவிட்ட எனக்கு உன்னுடைய விஷயங்கள் ஆச் சரியமாகத் தோன்றவில்லை. ஆனால் உன்னிடத்தில் நான் ஒரு விஷ யத்தில் சந்தோஷமடைகின்றேன். ஏனெனில் உன்னுடைய வாழ் நாள் தான் பாழாகிவிட்டது. அந்த வேகத்தில் ஒரு பாபமும் அறி யாத இந்த குழந்தையையும் கொலை செய்து அந்த பெரும் பாப

மூட்டையை தாங்கிக்கொள்ளாமல் அதிலிருந்து விடுதலை பெற்ருயே அது மிகவும் போற்றத் தக்கதே. உன்னுடைய குற்றத்திற்காக அக் குழந்தையைக் கொன்றிருந்தால் அதனுடைய ஜீவிதமும் பாழாகப் போயிருக்குமல்லவா? எல்லாம் விதியின் சோதனை!

எத்தனையோ குழந்தைகள் தவறிப்போய் இந்தப் பெண் ஒன்று தான் கடவுளின் பிச்சையாக இருக்கின்றது. இவளால்தான் எங்களது குடும்பமே ஜீவித்திருக்கின்றது என்று சொல்லலாம். இவளுடைய இஷ்டப்படி நாங்கள் நடப்பதே எங்களது சந்தோஷமாக நினைத்திருக்கிரும். இவளுக்கு இளங் குழந்தை யென்ருல் மிகவும் பிரீதி. யார் வீட்டில் சின்ன குழந்தை இருந்தாலும் அங்கு போய் உட்கார்ந்துவிடுவாள். இச் சிறுமியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவே இக் குழந்தையை இங்கு அனுப்பியிருக்கிருரென்று நினைக்கிறேன். உன்னுடைய கவலைகளை யெல்லாம் மறந்துவிடு. பழங் கதைகளை யெல்லாம் நினையாமல் புதிய உலகத்தில் புகுந்தவள் போல இன்றுமுதல் எனது வீட்டிலேயே நீயும் இருந்துவிடு. உனது குழந்தை என் பெண்ணுக்கு விளையாட்டாகவும், நீ அவளுக்குத் தலை பின்னி குளித்துவிட்டு அவளுக்கு வேண்டிய இதர காரியங்களைச் செய்பவளாகவும் இருக்கலாம். ஏதோ என்ஞல் கூடிய வரையில் உன்னையும் உன் குழந்தையையும் காப்பாற்றுகிறேன். உன்னை நான் இவ்வளவு சீக்கிரம் நம்புவதற்கு என்ன காரணம் தெரியுமா! உன்னுடைய சரித்திரம் மிகவும் பயங்கரமாயும் அவமானகரமாயுமிருப்பதை அன்னியளாகிய என்னிடத்தில் ஒளிக்காமல் நம்பிக்கையுடன் உண்மையைக் கூறிஞயே அந்த உண்மைதான் என்னையும் உண்மையாக நடக்கச் செய்கிறது. உனது தாயார் ஒருக்கால் உன்னைத் தேடிக்கொண்டு வந்தாலும் பிறகு பார்த்துக்கொள்வோம். நீ பச்சைச் சிசுவை வைத்துக்கொண்டு பரிதவிக்கவேண்டாம். கலங்காதே. கண்ணீர் விடாதே.'' என்று மிகவும் உருக்கத்துடனும் அன்பாகவும் கூறிஞள்.

இதைக் கேட்ட காமுவுக்கு தன்னை யறியாத இன்பமும் துன்பமும் தோன்றி வதைத்தன. அந்த அம்மாளை நமஸ்கரித்து அவளது இஷ்டப்படியே இருப்பதாக ஒத்துக்கொண்டு அந்த அம்மாளின்

வாக்கை தேவ வாக்காக நினைத்து எந்த சமயத்தில் என்ன வார்த்தை வருமோ என்று உத்தரவை எதிர் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அச் சிறு குழந்தையை கோகிலம் கீழே விடவேயில்லை. அவளுக் குண்டான சந்தோஷத்திற்கு எல்லையுமில்லை.

அன்று மாலை கோகிலத்தின் தகப்பனுர் வந்தவுடன் இந்த விஷயத்தை யறிந்து மிகவும் சந்தோஷத்தை யடைந்தார். தன் மகள் குழந்தையைக் கொஞ்சும் பாகத்தில் தானும் பங்கெடுத்துக்கொண் டார்.

தாங்கமாட்டாத விசனக் குவியலின் மத்தியிலும் ஒரு சிறிது இன்ப மிருப்பது போல காமுவுக்கு இவ்விடத்தில் சற்று நிம்மதி யான வாழ்க்கை ஏற்பட்டது. சுமார் ஒரு மாத காலமாயிற்று. இவ் வொரு மாதத்திற்குள் எஜமானியம்மாளின் பூர்ண அன்பிற்கும் காமு பாத்திரமாகிவிட்டாள். அவள் முன்னர் இழந்துவிட்ட தன் சகோதரியை மீண்டும் உயிர்பெற் றெழுந்ததாகப் பாவித்தாள். குழந் தையின் அருமையைப்பற்றிக் கூறவே வேண்டாம். துரதிருஷ்டக் காரர்களுக்கு மாத்திரம் அதிர்ஷ்டமோ இன்பமோ கிடைத்தால் அது கனவிற் கண்டதைப்போல உடனே மாறிவிடுவது உலக இயல்பு. துரதிர்ஷ்டமே உருவாக வந்துள்ள காமுவுக்கு இதற்கு மேல் நிம்மதியான வாழ்க்கையை யனுபவிக்க அந்த துரதிர்ஷ்டம் இடம் கொடுக்குமா? அது தனது கொடிய ஆட்சியை ஆரம்பித்து விட்டது.

ஒரு தினம் காலையில் சுமார் 10-மணிக்கு 2, 3 போலீஸ் உத்தி யோகஸ்தர்களும், பொன்னுசாமியும் கோகிலத்தின் வீட்டு வாசலில் கூட்டமாக வந்து "ஐயா! ஐயா!" என்று அதிகார தொனியுடன் அட்டகாஸமாக அழைத்தார்கள். பெரிய பட்டினங்களிலேயே போலீசாரென்ருல் பயப்படக்கூடிய நிலைமை இருக்கும்பொழுது இச் சிறிய ஊரில் அத் தலைப் பாகைகளைக் கண்டுவிட்டால் யார்தான் பயப்படாமலிருக்க முடியும்? வீதியில் போகிறவர்களும், அக்கம் பக்க முள்ளவர்களும் "ஐயோ! என்ன ஒவித்ரியமோ தெரியவில் லையே, போலீசுக்காரா வந்திருக்காங்களே!" என்று வியப்பும், திகைப்

யும், பயமும் கொண்டு கூட்டங்கூடி விட்டார்கள். உள்ளேயிருந்த கோகிலம் தங்கள் வீட்டு வாசலில் கூட்ட மிருப்பதையும், தன் பிதாவைக் கூப்பிடுவதையும் பார்த்து அவரிடம் ஒடி விஷயத்தைத் தெரிவித்தாள். அவர் உடனே வாசற்பக்கம் வந்து பார்த்ததும் போலீஸார் "ஐயா! உங்கள் வீட்டில் பதுங்கியுள்ள ஒரு கொலையாளி யையும், அவளை ஒளித்து வைத்து அவளுக்கு உடந்தையாயிருப்ப தற்காக உங்களையும் கைது செய்ய வந்திருக்கிறோம். இதோ வாரண்டு" என்று பெரிய வெடி வெடித்தது போன்று கூறியதைக் கேட்ட அவரும், கோகிலம் உட்பட அங்குக் கூடியிருந்தவர்களும் திடுக்கிட்டு, மனம் பதறி அசைவற்று நின்றுவிட்டார்கள்.

## 17-வது அதிகாரம்

## ஈசனின் சோதனை—நேசனின் வேதனை

உலகத்தில் எந்த விஷயத்தையும் ஆற அமர யோசித்து அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து பகுத்தறிந்து நடப்பவர்கள் எங்கோ ஒரு சிலர் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் இக் கலியில் கிடைப்பார்கள். ஆத்திரமும், கண்மூடித்தனமான முன் கோபமும், பிறர் கலகத்தைக் கேட்டுத் தாண்டவம் செய்யும் சின்ன புத்தியும், அற்பத்தனமும், அகம்பாவமும், நான் என்கிற மமதையும், வீண் ஜம்பமும், வாய்ப் பறை அடித்தலும் தன்னால் முடியாதவற்றையெல்லாம் முடியும் என்று மார் தட்டும் மூடத்தனமும் பிறரிடத்தில் குற்றம் கண்டு பிடித்துக் குறைகூறுவதே தன் பெருந்தன்மையான தொழிலென நினைக்கும் இழிவான குணமும், இதுபோன்ற இன்னும் எத்தனையோ கழிபட்ட தன்மையை உடைய மனிதக் கூட்டம்தான் இக் கலியில் ஏராளமாக மிஞ்சிவிட்டது.

மேற்குறித்த சில முக்கிய குணங்களில் முதல் தாம்பூலம் பெற்று முதன்மையாக விளங்கும் நமது வள்ளியம்மாளின் தற்போதிய தன்மையை விவரிக்கவும் வேண்டுமா? அந்த அம்மாள் தன்னுடைய ஆத்திரத்தில் சாந்தமடைவதற்கும் எது குற்றம் எது குற்றமில்லை என்று தீர யோசித்து விசாரிப்பதற்கும் அவள் மூளையில் வேலை செய்வதற்கு இடம் உண்டா? உக்ர காளியை விட அதிக கோபத்தை யடைந்து தனக்கு ஏதோ முழுகிவிட்டதுபோல ஒரு பாபமும் அறியாமல் நிரபராதியாக நிற்கும் பாரதியைத் தாறுமாறுகத் திட்டி, "சனியனே! நீயும் துலைந்துபோ அவளோடு. ஆபாசமான பிழைப்புப் பிழைத்த உன்னை வைத்துக்கொண்டு இனி என்னுல் மாரடிக்க முடியாது. சாகிற காலத்தில் ராமா, கிருஷ்ணு கோவிந்தா என்று சொல்லி எனக்கு நல்ல கதியைத் தேடிக்கொள்வதை விட்டு உதவாக் கரை, ஊழல் பிணங்களை வைத்துக்கொண்டு பாபத்தைத் தேடிக்கொள்ளுவானேன்!"

இந்த அம்மாளின் வார்த்தை முடிவதற்குள் பனை மரம் போன்று அங்கு ஒரு கட்டைத் தடியன் தோன்றி 'என்ன! என்ன அமர்க்களம் இது? பாட்டி! உனக்கு ஒரு விஷயம் நல்ல செய்தி சொல்லவல்லவோ வந்தேன். இங்கு ஏதோ தடபுடல் படுகின்றதே. ஓகோ! இந்தக் குட்டி இங்கு எங்கே வந்தா? சரிதான். உனக்குச் சாகிற காலத்திலே இந்தச் சனியனும் வந்துதா? போதும். போதும். எவனே ஒரு பந்தாட்டக்காரப் போக்கிரியை நேசித்து, தவருக நடக்கிருள் என்று அந்த அவமானம் தாங்காமல் அவளைப் பெற்ற தாயாரே சுருக்கிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்க நீயா ஆதரிக்கிறதற்குக் கையில் ஏந்திக்கொண்டாய். உம். சரி. சரி. நான் வந்த செய்தியை சொல்லிவிட்டுப் போகிறேன். நமது மண்டியூர் மணியக்காரர் வீட்டிலும், கர்ணம் குப்புசாமி வீட்டிலும் இன்னும் அனேகர் வீட்டிலும் எல்லோரும் நாளை புதன்கிழமையன்று ஒன்ருகச் சேர்ந்து தமாஷாகத் தீர்த்த யாத்திரைக்குப் புறப்படப் போகின்றுர்கள். எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. எங்கு சென்ருலும் எனக்குச் சொல் என்று நீ சொல்லியிருந்தாயாமே. ஆகையினுல் உடனே உனக்குச் சொல்லி உன்னை அழைத்துவரும்

படி மணியக்காரர் உத்திரவிட்டிருக்கிறார். ஆகையினால் ஓடி ஓடி வந்தேன். போய் என்ன பதில் சொல்றது பாட்டி!'' என்று கோடையிடி இடிப்பதுபோல நிரபராதியான பாரதியின் தலைமீது ஒரு பாறையைப் புரட்டிவிட்டு, கிழவிக்கு விஷயத்தைக் கூறினாள்.

இதைக் கேட்ட கிழவி "லபோ திபோ'' என்று அடித்துக் கொண்டு "ஐயோ! அநியாயமே! கிணறு வெட்டப் பூதம் கிளம்புவது போல விஷயங்கள் வருகின்றதே. இந்தப் பாவி மகளுக்காகவா அவள் தூக்கு போட்டுக்கொண்டாள். அட, அக்ரமமே! போதும் போதும். என்னுடைய அந்திய காலத்துப் பிழைப்பெல்லாம் பாழாய்ப் போய்விட்டது. தீர்த்த யாத்திரை செய்து என் பாவத்தையெல்லாம் துலைத்துக்கொள்வதற்குத்தான் அந்த மஹானு பாவர்களெல்லாம் இப்பொழுது யாத்திரை புறப்படுகிறார்கள். அப்பா, சேஷா! இதோ வந்துவிட்டேன் என்று சொல்லு. எனக் கென்ன மூட்டையா முடிச்சா. இதோ ஒரு மடிசஞ்சியைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டேன். சுவாமி! தெரியாத பாவத்திற்கு மன்னிக் கணும்! என்று கடவுளுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு பாரதியை நோக்கி 'அடி, கெட்டுப்போன பிணமே! நீ எக்கேடானும் கெட்டு எருக்கு முளைச்சுப்போ. அந்தப் பந்தாட்டக்காரன்மேல் நான் பட்ட சந்தேகம் நிச்சயமாய்விட்டது. அவனையே தேடிக்கொண்டு ஓடிப்போ. இனிமேல் இங்கு நிற்காதே.'' என்று கூவி பாரதியைக் கழுத்தைப் பிடித்து வாசலில் தள்ளிவிட்டு, தான் ஒரு மடிசஞ்சியை எடுத்து அக்குளில் வைத்துக்கொண்டு, வீட்டைப் பூட்டிச் சாவியை எதிர் வீட்டு அம்மாளிடம் கொடுத்துவிட்டு 'அம்மா! வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கோ! நான் யாத்திரை போய் விட்டு வருகிறேன். இந்தச் சனியனால் எனக்கு வந்த பாவத்தை எல்லாம் துலைத்துத் தலை முழுகி விட்டு வருகிறேன்.'' என்று கூறி விட்டுக் கம்மாளப் பிணம்போல விரைத்துக்கொண்டு சேஷன் பின் னால் விசுக்கு விசுக்கு என்று நடக்க ஆரம்பித்தாள்.

இந்த எதிர் பாராத வார்த்தையையும், சம்பவத்தையும் கண்ட நமது அருங்குணபூஷணியாகிய பாரதி நிலைதடுமாறினாள். வேகமாக ஓடி கிழவியை இடைமறித்து விழுந்து காலைப் பிடித்துக்கொண்டு

“பாட்டி! இம்மாதிரி செய்வது உனக்குத் தர்மமா? கடவுளுக்குத் தான் அடுக்குமா? என்னைக் காப்பாற்றி கரை சேர்த்து விடுவதாகக் கூறி யழைத்துக்கொண்டு வந்து, முன்பிருந்ததைவிட அதிகமான அனுதையாக நடுத்தெருவில் விட்டுவிட்டுச் செல்வதுதான் நீ புண்ணியம் தேடுவதற்காகச் செல்கிறேனென்கிருயே அதன் தத்துவமா? என்னை ஒரு வகையிலும் உருப்பட விடாமல் என் பிறவியையே நீ பாழாக்கிவிட்டாயென்று நான் துணிவாகச் சொல்வேன். இப்படி ஒரு பரதேசிப் பெண்ணை இம்சித்து மனம் நோக வைத்து, கலங்கச் செய்வதுதான் உனது தர்ம சாஸ்திரமா? என்னை நீ அழைத்துக் கொண்டு வராமலிருந்திருந்தால் நான் எப்படியோ எந்த புண்ணியாத்மாக்களின் உதவியினுலேயோ இம்மாதிரியான அவஸ்தைகளும் கெட்ட பேருமின்றி பிழைத்துப்போயிருப்பேன். ஐயோ! உன்னுடைய ஆதரவால் பிரமாதக் கோட்டை கட்டிவிடலாமென்று இங்கு வந்ததற்குப் பலன் இதுதானு? முகத்திற்கு மேலோடிய வெள்ளம் சாண் ஏறினுலென்ன, முழம் ஏறினுலென்ன என்பது போல என்னை இவ்வளவு தூரம் நீ செய்த பிறகு நான் எதைச் சொன்னுல்தானென்ன, செய்தால்தானென்ன? உன்னுடைய உள்கருத்தை நானறியமாட்டேனென்று நினைக்காதே.

பாட்டி! நான் வயதில் சிறியவளாக இருந்தாலும் உன்னுடைய கருத்தை ஒரு நொடியில் அறிந்துகொண்டேன் அதாவது நீ என்னை ஆதரிக்கும் முறையில் அழைத்துக்கொண்டுவந்து என்னை ஓர் சுவாதீனக் கருவியாக வைத்துக்கொண்டு யாரோ ஒரு கூன், குருடு, கிழம், பழம் எப்பேர்ப்பட்டவனுயினும் சரி பணமிருந்தால் போதும் என்று அவனுக்கு என்னை விற்றுவிட்டுப் பெருவாரியான பணத்தை அவனிடம் பெற்றுக்கொண்டு, என் தாயார் வைத்துச்சென்ற பொருளேயும் அபகரித்துக்கொண்டு, தானம் தர்மம் செய்து நீ புகழடைவதற்கும், ஊரார் உன்னை மெச்சுவதற்கும் மட்டும் நீ மனப்பூர்வமாக எண்ணினுய். அக்ரமத்திற்கு அழிவே இல்லையென்று நினைப்பது பூனை கண் மூடிக்கொண்டு பூலோகம் இருண்டுவிட்டது என்று நினைப்பது போலவிருக்கிறது. உனது எண்ணம் முற்றும் பலிக்காமல் போய்விட்டது. இத்தனை! அக்ரம சிந்தையை யுடைய நீயா இந்த நாட்டியம் நடிக்கிருய்? வாயில் கொஞ்சம் வித்தையும், மனத்தில்

கொஞ்சம் பரிசுத்தமும், தைரியமுமிருக்கும் ஒவ்வொருவரும் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியுள்ளவர்களென்பதை மறக்காதே. இப்பொழுதும் பாதகமில்லை. சொல்லுகின்றேன். வீணாக நீ என்னை இப்படிக் கெடுத்துவிட்டுப் போகாதே. இது ஒரு நாளும் உனக்குப் புண்ணியமாகாது. நீ வீட்டிற்கு வந்து சேர்; இல்லையேல் என்னையும் தீர்த்த யாத்திரைக்கு அழைத்துச் செல்'' என்று ஆத்திரத்துடனும், துக்கத்துடனும் கூறினாள்.

இதைக் கேட்ட வள்ளியம்மாளுக்கு நரஸிம்மாவதாரமே வந்துவிட்டது. தாறுமாறுகத் திட்டி, பாரதியை இழுத்து அப்புறம் தள்ளிவிட்டு "இந்த அற்ப நாயை புண்ணிய தீர்த்தத்துக்கும் அழைத்துச் செல்லவேண்டுமாம். வெட்கங் கெட்ட பேமானி! யாரிடத்திலடீ இந்த சாகஸம்! வாடாப்பா சேஷு!'' என்று அவனை அழைத்துக்கொண்டு மணிக்கு 30 மைல் செல்லும் மோட்டாரை விட வேகமாக நடக்க வாரம்பித்தாள். சேஷனால் கூட இவளுக்குச் சரியாக நடக்க முடியவில்லை. அங்குக் கூடியிருந்த ஜனங்களில் பாதிப்பேர் கிழவிப் பக்கமும், பாதிப் பேர் பாரதிப் பக்கமும் பேச வாரம்பித்தார்கள்.

தள்ளப்பட்ட பாரதி புலம்பிக்கொண்டே எழுந்தாள். சுற்றுமுற்றும் ஜனங்கள் தத்தம் போக்காகப் பேசுவது அவள் காதில் விழாமலில்லை. பாரதி அவ் வார்த்தைகளை லக்ஷியம் செய்யாமல் "ஈச்வரோ ரக்ஷது'' என்று எண்ணி கடவுளைத் தியானித்தபடியே செல்ல ஆரம்பித்தாள்.

அங்குள்ள சிலர் பாரதியைத் தடுத்து "தனியாக எங்கும் செல்லவேண்டாம். ஏதோ எங்கள் வீட்டில் வேலை செய்து கஞ்சி குடித்து இரு'' என்று கேவலமாக மமதை பிடித்துப் பேசினார்கள். இதைக் கேட்ட பாரதி பணிவான குரலோடு பேசத்தொடங்கி. "அம்மா! நீங்கள் சொல்வதற்கே நான் சந்தோஷப்படுகிறேன். கையை உழைத்துக் கஞ்சி குடிப்பதற்கு இவ்வூர் குருக்ஷேத்திரம் அல்ல. ஆகையால் நான் எங்கு சென்றாலும் என் கை உழைப்பினால் நான் பிழைத்துக்கொள்வேன்'' என்று தைரியமாய்க் கூறிவிட்டு

மேலும் நடக்க ஆரம்பித்தாள். அப்போது பிற்பகல் ஒருமணி இருக்கும். அவ்வூருக்கு 2 மைலுக் கருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தாள். கையிலோ காலணு கிடையாது. அங்கிருந்து தான் எங்கு செல்வது? என்ன செய்வது? என்று ஒன்றும் தெரியவில்லை. "இப்படி யெல்லாம் அலைந்து வருந்தவா ஈசுவரன் நம் தலையில் எழுதினுன்! ஐயோ! எனக்கு இப்பொழுது எந்த வழியைக் காட்டப் போகிருனே தெரியவில்லையே!'' என்று அபாரமான விசனத்தை யடைந்து கண்ணீர் பெருக்கியவாறு அங்கு போடப்பட்ட பலகையின்மேல் பதுமைபோல் உட்கார்ந்தாள்.

அப்பொழுது சுமார் 10, அல்லது 15 பேர்கள் கையில் பேட்டும், பந்தும் எடுத்துக்கொண்டு அந்த ஸ்டேஷனுக்கு வந்து ரயிலை எதிர் பார்த்த வண்ணம், தமாஷாகப் பேசிக்கொண்டு நின்றுர்கள். அங்கு புலம்பிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் பாரதிக்கு இந்த பந்தாட்டக் கூட்டத்தைப் பார்த்தவுடன் தன்னுடைய அண்ணனின் பழங்கால நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றுக வந்தன. "ஐயோ! நம்முடைய அண்ணன் நன்றுக விருந்த காலத்தில் இம்மாதிரியாகச் சென்ற காக்ஷி என் கண்முன் தாண்டவமாடுகின்றதே! இப்படியும் ஒரு காலத்தில் அவன் இருந்தானு என்று நினைக்கும்படி அவன் தலைவிதி ஆகிவிட்டதே! ஐயோ! அண்ணு! உனக்கும் நல்ல காலம் பிறந்து இம்மாதிரி நீயும் மறுமுறை காட்சி கொடுப்பாயா? ஹா! இப்பொழுது நீ எப்படி இருக்கிருய் என்றுகூடத் தெரியவில்லையே! நீ புத்தி ஸ்வாதீனமற்று ஒரு சிறையிலகப்பட்டுத் தவிக்கின்றுய். நானே புத்தி சுவாதீனத்துடனேயே நாதியற்றுத் தவிக்கின்றேன். நமக்குள் என்ன வித்தியாசம் இருக்கின்றது''? என்று கட்டு மீறிய துக்கத்துடன் கலங்குகின்றுள்.

அங்கு நிற்கும் பந்தாட்டக் கூட்டத்தினர் சந்தோஷமாகச் சிரித்து அங்கு மிங்கும் ஓடும் சமயத்தில் அகஸ்மாத்தாக பாரதியைப் பார்த்தார்கள். அதில் ஒருவன் திடுக்கிட்டு நின்று மற்றவர்களை நோக்கி, "நண்பர்களே! ஒரு காலத்தில் நம்முடன் பந்தாடிய வீரன் மாசிலாமணியின் முகம் போலவே இப் பெண்மணிக்கு இருக்கிறது பார்த்தீர்களா! இப்பொழுது அவன் பைத்தியம் பிடித்து ஆஸ்பத்

திரியிலல்லவோ இருக்கின்றான் பாவம். எப்பேர்ப்பட்ட வாழ்வெல்லாம் எப்படியாய்விடுகின்றது. அவனுடைய தாயார்கூட தற்கொலை செய்துகொண்டு இறந்ததாகக் கேள்விப்பட்டேன். ஆம்! இப்பொழுது நினைவிற்கு வருகின்றது எனக்கு. அவனுக்கு ஒரு சகோதரி உண்டென்று மாசிலாமணி பலதரம் சொல்லியிருக்கின்றான். சாயலைப் பார்த்தால் தத்ரூபம் மாசிலாமணியைப் போலவே இருப்பதால் இவள்தான் அவன் சகோதரியாக இருக்கலாம். தனியே இவ்விள மங்கை ஏன் இங்கு உட்கார்ந்து புலம்பவேண்டும்? ஐயோ பாவம்! கண்ராவியாக விருக்கின்றது. நான் அருகில் சென்று விசாரிக்கின்றேன். நம்மால் ஏதேனும் செய்ய முடியுமாயின் உதவலாம். ஒரு நண்பனுக்காக நாம் இதைக்கூட செய்யாவிட்டால் என்ன பிரயோஜனம்?'' என்று சொல்லிக்கொண்டே தைரியமாக பாரதியின் முன் வந்து மரியாதையுடன் நின்றான்.

தான் சற்றும் எதிர் பார்க்காத விதமாய் அக் கூட்டத்திலிருந்து ஒருவன் தன்முன் வந்து நிற்பதைக் கண்ட பாரதி திடுக்கிட்டு எழுந்து நின்றாள். இதைக் கண்ட அவ் வாலிபன் மிகவும் பணிவோடு பேசத் தொடங்கி "அம்மணீ! வித்தியாசமாக எண்ணி பயப்பட வேண்டாம். நான் ஒரு சந்தேக நிவர்த்திக்காக இங்கு வந்திருக்கிறேன். ஒரு காலத்தில் எங்களுடன் பந்தாடி அநேக பரிசுகளைப் பெற்ற மாசிலாமணியைப் போலவே உங்களுடைய சாயல் இருப்பதால்,—அவருக்கு ஒரு சகோதரி உண்டென்று அவர் தெரிவித்திருக்கிறார்—அந்த அம்மாள் தாங்களாகத்தானிருக்குமோ வென்ற சந்தேகத்தால் கேட்கின்றேன். மன்னிக்கவேண்டும்.'' என்று அவன் கூறும் போதே பாரதியின் துக்கம் பன்மடங்கு அதிகரித்தது. சிறு குழந்தையைப் போல தேம்பித் தேம்பி அழுதபடி—"ஐயா! அந்த மஹா பாவி நான்தான்'' என்று அதற்குமேல் பேசமாட்டாமல் முகத்தை மூடிக்கொண்டு பலகைமேல் உட்கார்ந்து தலையைக் குனிந்துகொண்டு விட்டாள்.

இதைக் கண்ட அவ் வாலிபன் "அம்மணீ! நாங்கள் நினைத்தது சரியாகிவிட்டது. தற்போது தாங்கள் யார் பாதுகாப்பில் இருக்கின்றீர்கள்? இங்கு ஏன் தனிமையாய் இருந்துகொண்டு வருந்து

கின்றீர்கள்? நான் அறியலாகுமா? எங்களால் ஏதேனும் உதவி வேண்டுமா? நீங்கள் சற்றும் வித்தியாசமின்றி எங்களிடம் தெரிவியுங்கள். உங்களுடைய தற்போதைய குடும்ப நிலைமை எங்களுக்குத் தெரியும்.'' என்று நயமாகக் கேட்டான்.

இதைக் கேட்ட பாரதிக்கு தான் சிறிதும் எதிர் பாராத விதமாக, தனக்குப் பேருதவி கிடைத்ததைப்பற்றி அபாரமான சந்தோஷம் உண்டாயிற்று. எனினும் அவர்கள் கேட்ட கேள்விக்குத் தான் எவ்விதமான பதில் அளிப்பது என்று தோன்றாமல் சிறிது தயங்கினாள். வலுவில் தனக்கு உதவி கிடைத்திருக்கும் சமயத்தில் அதைக் கை நழுவ விட்டால் பின்னர் வருந்த நேரும் என்று எண்ணி அவ் வாலிபனை நோக்கி "அய்யா! உண்மையில் நான் ஒரு அனாதைப் பரதேசி. இந் நிமிடம் யார் மூலமாகவாவது கடவுள் ஓர் உதவியைக் காட்டுவாரா வென்று ஏங்கித் தவித்து எதிர் பார்த்துக்கொண்டிருந்த தருணம் அந்தக் கடவுளே கருணைகூர்ந்து தங்களை அனுப்பினாரென்று உள்ளம் பூரிக்கின்றேன்.

அய்யா! எனக்குத் திக்கில்லை. திசையும் இல்லை. அண்டிப் பிழைக்க யாரும் கதியில்லை. நான் தற்போது எங்கு செல்வது என்பதையே தெரியாமல் தத்தளிக்கின்றேன். எந்த இடத்திற்குச் சென்றாலும் என் கையை உழைத்துக் கஞ்சி குடிக்கத் தயாராய் இருக்கின்றேன். அதற்கு எங்கேனும் ஒரு வழி காட்டிவிட்டீர்களானால் என்னுயுள் பரியந்தம் நான் நன்றியுள்ளவளாக இருப்பேன். அய்யா! மற்றொரு விஷயம் கேட்கவேண்டாமென்று நினைத்தாலும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அதாவது நீங்களெல்லோரும் பந்தாட்ட வீரர்களாய் இருப்பதால், பந்தாட்டத்தில் பெரும் புகழும் கீர்த்தியும் பெற்று விளங்கும் ராஜசேகரன் என்பவரை உங்களுக்குத் தெரியுமா? இவ் வுலகத்தில் எனக்கு ஒரு மனிதர் தெரியும் என்று சொல்லிக்கொள்ள முடியுமானால் அந்த ஒரு மனிதரைத்தான் எனக்குத் தெரியும். என் அண்ணனோடு பந்து விளையாடும்பொழுது அவரைப் பார்த்திருக்கின்றேன். அந்த மஹானுபாவன் இருக்கும் இடத்தை எனக்குத் தெரிவித்தால் அதுவே போதுமானது'' என்று மிகவும் கெஞ்சிக் கேட்டாள்.

இதைக் கேட்ட அவ் வாலிபன் சற்று திடுக்கிட்டவனாய், சாம்பியன் ராஜசேகரனையா தாங்கள் பார்க்கவேண்டும். ஆம். நிபுணன் என்றால் அவன்தான் நிபுணன். அவனைப்பற்றிப் புகழாதவர்கள் உலகத்தில் கிடையாது. அவனுடைய கீர்த்தியையும் பெயரையும் நான் கேட்டிருக்கின்றேனே அல்லாது, எனக்கு அவனிடத்தில் அதிகப் பழக்கம் கிடையாது. அதோ நிற்கும் கூட்டத்தினர்களில் பலர், ராஜசேகரனோடு பந்தாடி சக்கையாக உதை வாங்கிப் பல முறை தோல்வியுற்றவர்கள். அவர்களுக்கு ராஜசேகரனின் இருப்பிடம் ஒருக்கால் தெரிந்திருந்தாலும் இருக்கலாம். நான் சமீபத்தில் தான் பந்தாட்டத்தில் முன்னணியில் வந்துகொண்டிருக்கிறேன். அம்மா! ஒரு விஷயம் உங்கள் மனத்திலேயே வைத்துக்கொள்ளுங்கள். அந்த ராஜசேகரனால் பல தரம் தோல்வி பெற்ற இவர்களுக்கு அவனைக் கண்டால் கொஞ்சம் பொறாமையும் அசூயையும் இருக்கிறதென்பதை நான் பல தரம் அறிந்துகொண்டிருக்கிறேன். ஆதலால் அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதென்றால் எனக்கு ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது. நீங்கள் ஒன்று செய்யுங்கள். ரயில் வரும் நேரமாய்விட்டது. இந்த டிக்கட்டை வைத்துக்கொண்டு நீங்கள் ஸ்திரீகள் வண்டியில் ஏறிவிடுங்கள். இப்பொழுது நான் என்னுடைய ஊருக்குப் போகின்றேன். நீங்களும் அங்கு வந்து என் வீட்டில் இருங்கள். வீட்டில் என்னுடைய தாயாரும் சம்சாரமும் இருக்கின்றார்கள். உங்களைச் சரியாகக் கவனித்துக் கொள்வார்கள். நான் பிறகு ராஜசேகரன் இருப்பிடத்தை விசாரித்து அங்கு உங்களைக் கொண்டு சேர்க்கிறேன். நீங்கள் கவலைப்படாமல் தைரியமாக வாருங்கள்'' என்று தேறுதல் கூறி டிக்கட்டை அவளிடம் கொடுத்துவிட்டுத் தான் வேறு வாங்கிக்கொண்டு தன் சகாக்களுடன் சென்றான்.

குறித்த நேரத்தில் ரயிலும் வந்துவிட்டது. நமது அருங்குண பூஷணமணியாகிய பாரதி அந்த டிக்கட்டை வாங்கிக்கொண்டவுடன் அதைக் கொடுத்த மனிதன் உண்மையில் தன்னுடைய அண்ணனைத் தெரிந்தவன்தானா. அவன் சொல்லிய வார்த்தைகள் நம்பக்கூடியவைகள்தானா? அவனுடன் ஊருக்குப் போய்த் தங்குவது சரியான

காரியந்தானு? என்பதைப்பற்றி சஞ்சலப்பட்டு யோசித்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வருவதற்குள் வண்டி வந்துவிட்டதால் மனம் குழப்பத்தை அடைந்து "ஈச்வரன் விட்ட வழி ஆகட்டும். இந்த வண்டியில் ஏறிவிடுகிறேன். எத்தனையோ தீமைகளை அநுபவிப்பதற்கென்று ஜெனனம் எடுத்துவிட்டேன். இனிப் பயம் என்ன?" என்று துணிந்து ஸ்திரீகள் வண்டியில் ஏறி உட்கார்ந்தாள்.

அந்த வண்டியிலோ கிழப்பிணம் ஒன்று படுத்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு ஒருவருமே இல்லை. தன்னந் தனியாகத் தான் உட்கார்ந்திருப்பதை எண்ணி வருத்தம் அதிகமாகப் பொங்கிற்று. அடுத்த நிகிடம் வண்டியும் புறப்பட்டுவிட்டது. எந்த ஸ்டேஷனில் தான் இறங்கவேண்டும் என்பதையும் டிக்கட்டிலிருந்து தெரிந்துகொள்ளாமல் பழங் கதைகளையெல்லாம் எண்ணியெண்ணி மனம் புண்ணுகிக் கண்ணீர் வடிய அப்படியும் இப்படியும் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். சில ஸ்டேஷன்களின் பெயரைப் பார்த்தவுடன் நம்முடைய ஊருக்கு அருகாமையில்தான் நாம் வந்து கொண்டிருக்கிறோம் என்பவதத் தெரிந்துகொண்டாள்.

அவ்வாறு தெரிந்துகொண்டவுடனே இன்னும் அதிகரித்த மனக்கலக்கம் உண்டாயிற்று. அடுத்த ஸ்டேஷன்தான் தான் இதுகாறும் வாழ்ந்த வாணீபுரம் என்று தெரிந்ததும் ஸ்டேஷனையும் அவ்வூரையும் பார்க்க மனம் சகியாமல் பெஞ்சியின் மத்தியில் போய் உட்கார்ந்து விசனித்துக்கொண்டிருந்தாள். நாம் முன்பொரு அத்தியாயத்தில் ராஜசேகரன் ஓடும் ரயிலில் பாரதியின் உருவத்தைப் பார்த்துப் பித்துப்பிடித்தவன்போல் ஓடி விளக்குத்தூணில் முட்டிக்கொண்டு விழுந்தான் என்று சொன்னேமல்லவா? பாரதி, தன் ஊரைப் பார்க்க மனம் சகியாது கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்துவிட்டபடியால் ராஜசேகரனை அவள் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதிர்ஷ்டம் என்பது ஒன்றில்லையா? அந்த அதிர்ஷ்டம் எல்லாரிடத்திலும் எல்லா சமயத்திலும் வந்து பிரசன்னமாவதில்லை அல்லவா? அதிர்ஷ்டத்தின் ஜோதியையே இன்னும் காணுத பாரதிக்கு, ராஜசேகரனைக் காணும்படியான பாக்யம் எப்படிக் கிடைக்கும்? ரயிலோ பறந்துபோய்விட்டது.

பொழுதும் ஏறிக்கொண்டே போகின்றது. சுமார் இரவு ஏழு மணிக்கு நாம் முன் தெரிவித்த பந்தாட்டக் கூட்டத்தினரில் சிலர் ஒரு ஸ்டேஷனில் இறங்கினார்கள். பாரதிக்கு டிக்கட்டுக் கொடுத்த மனிதன் பாரதியின் வண்டியருகில் வந்து "அம்மா! இந்த ஊர்தான் எங்கள் ஊர். ஸ்டேஷனுக்கு மிகவும் அருகாமையிலேயே எங்கள் வீடு இருக்கின்றது. ஐந்து நிமிடத்தில் நடந்துபோய் விடலாம். வாருங்கள்" என்று வெகு வணக்கமாகவும் நயமாகவும் அழைத்தான்.

இதைக்கேட்ட பாரதி கடவுள்மீது கருத்தைச் செலுத்தி "ஈசா! நீ விட்ட வழி" என்று எண்ணியவாறு வண்டியை விட்டு இறங்கினாள். பின்னர் அவ் வாலிபர்கள் சென்ற திக்கே இவளும் பின்தொடர்ந்து நடந்தாள். சுமார் ஒரு பர்லாங்கு தூரம் நடந்ததும், அவ் வாலிபனின் வீட்டை அடைந்தார்கள். அவ்வீடு அதிகமான படாடோபமின்றி, அழகிய சிறு மெத்தை வீடாக காணப்பட்டது. அவ் வீட்டின் வாசலில் மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த வாலிபன் நமது இள மங்கையை உள்ளே அழைத்துச் சென்று தன் தாயாரைக் கூப்பிட்டு, "அம்மா! சில வருடங்களுக்கு முன்பு பந்தாட்டத்தில் ஜயித்து பரிசு பெற்று வந்த மாசிலாமணி என்ற ஒரு வீரனுக்கு நாம் விருந்து நடத்தினோமே உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அவனுடைய சகோதரி இந்தப் பெண்மணி. தற்போது அவர்கள் பலவகையிலும் நொந்துபோய் விட்டார்கள். அகஸ்மாத்தாக நான் இன்று சந்தித்தேன். நம் வீட்டில் இருக்கட்டுமென்று அழைத்துக்கொண்டு வந்தேன். கவனித்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு பாரதியை நோக்கி, "அதோ அவ்வறையில் என் மனைவி இருக்கின்றாள்; நீங்கள் யாதொரு வித்யாசமுமின்றி இவ்விடத்தில் சொந்த வீடுபோல தாராளமாக இருக்கலாம். கவலைப்படாதீர்கள்" என்று கூறிவிட்டுத் தன்னுடன் வந்த மற்ற சகாக்களைக் கவனிக்கப் போய்விட்டான்.

தங்கப் பதுமைபோல் நிற்கும் பாரதியைக் கண்ட அந்த பெரியம்மாள், "வாம்மா! உன்னைப் பார்த்தால் மிகவும் களைத்துப்போயிருப்பதாகத் தெரிகிறது. நீ முதலில் ஸ்நானஞ் செய்துவிட்டுப்

போஜனம் செய். பிறகு அவர்கள் வந்து சாப்பிடட்டும்'' என்று அன்பாகக் கூறி ஸ்நான அறைக்கு அழைத்துச் சென்றாள்.

பாரதியும் தான் வந்த களைப்பு தீர ஸ்நானஞ் செய்துவிட்டுச் சாப்பிட்டபிறகு அங்குள்ள ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தாள். அவ் வீட்டு வாலிபனின் மனைவி எதிர் அறையிலிருந்து பாரதியை எட்டிப் பார்த்துக்கொண்டே ஏதும் பேசாமல் இருந்தாள். வாலிபனின் தாயார் மீண்டும் பாரதியின் அருகில் வந்து 'அம்மா! நீ அதோ அந்த உள்ளே போய்ப் படுத்துக்கொள்ளு. வீட்டு வேலை முடிந்ததும் நானும் வந்து உன் பக்கத்தில் படுத்துக்கொள்கிறேன். கவலையற்று நிம்மதியாய் நித்திரை செய்'' என்று அன்போடு கூறி அவ்வறைக்கு அழைத்துச் சென்று ஒரு படுக்கையைப் போட்டுப் படுக்கச்செய்தாள்.

முன்பின்னறியாத தன்மீது தாயும் மகனும் இவ்வளவு அன்பு காட்டி உபசரிப்பதைக் கண்டு பாரதி வியப்புக் கடலில் மூழ்கினாள். உலகத்தில் யாருக்காயினும் எவ்வகையிலாவது ஒரு வகையில் புகழ் ஏற்பட்டால் அப்புகழ் ஆபத்திற்கு உதவும் அருமருந்தாகும் என்ற பெரியாரின் வாங்கு இப்பொழுது நிதர்சனமாய்ப் பலித்துவிட்டது. என் அண்ணன் பந்தாட்டத்தில் புகழ் பெற்றதனால் அல்லவோ அந்தப் புகழ் இப்பொழுது என்னுடைய நிலைமையில் கைகொடுத்துக் காத்தது. எல்லாம் ஈசன் செயல்'' என்று தனக்குள் பலவாறாக எண்ணமிட்டவண்ணம் படுத்திருந்தாள்.

நல்லோர் துணையும், சத் சகவாசமும் ஏற்பட்டதைக் கருதி சந்தோஷமுறும் பாரதியின் பொழுது அவ்விடத்திலேயே இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. அன்னியர் வீட்டில் ஒரு காரியமும் இல்லாமல், தான் இப்படி அனாவசியமாக சாப்பிட்டுக்கொண்டு இருப்பது அவளுடைய மனதுக்கு மிகவும் புண்ணாகத் தோன்றியது. தாயும் மகனும் தன்னிடம் அபாரமான பக்ஷமாக இருக்கின்றார்களே அன்றி, மருமகள் தன்னிடத்தில் ஏதோ ஒருவிதமான மாறுதலனுடனேயே இருப்பதைக் கவனித்தாள். அதன் காரணம் அவளுக்குச் சற்றேனும் புலப்படவில்லை. அதைப்பற்றிச் சிறிது சிந்திக்கவும் தொடங்கினாள். நல்ல உத்தமத் துணை கிடைத்திருக்கும் இவ்விடத்தை

விட்டு எங்கு செல்வது என்பதையே அறியாமலிருக்கும்பொழுது, தான் என்ன செய்வது என்று குழம்பிப்போய்விட்டாள்.

அவ்வீட்டு வாலிபன் மீண்டும் எங்கோ பந்தாட்டத்திற்குச் செல்லவேண்டி நேரிட்டதால் பாரதியை நோக்கி, 'அம்மணி! நாங்கள் வெளியூருக்குச் சென்று வருகின்றோம். நீங்கள் கவலையின்றி என் தாயாரிடம் இருங்கள். நான் சென்ற இடத்தில் நீங்கள் தெரிவித்த விஷயத்தை விசாரித்துக்கொண்டு வருகின்றேன். கவலைப்படாதீர்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான். மீண்டும் இரண்டு நாட்கள் சென்றன. பாரதி தானே வலுவில் அவ்வாலிபனின் மனைவியிடம் சென்று, 'அம்மா! நான் வந்த நாள் முதலாக நீங்கள் என்னேடு பேசாமலிருக்கின்றீர்களே அதன் காரணத்தை அறிந்துகொள்ளாமலிருக்க என்னுல் முடியவில்லை. நானே அனுதைப் பக்ஷி. இந்த மரத்தில் அண்டிக்கொண்டிருக்கின்றேன். இங்கு தங்களுடைய மாமியாரும் பர்த்தாவும் என்னை எவ்வளவோ அன்பாக நடத்துகையில் தாங்கள் மட்டும் ஏதோ வித்தியாசமாக நினைத்திருப்பது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கிறது. என்னை அறியாமல் ஏதாவது நான் குற்றம் செய்திருக்கின்றேனு? அப்படி ஏதாவது இருக்குமாயின் தாங்கள் அதைத் தெரிவித்து என்னைக் கண்டிக்கலாகாதா? பரம பரதேசியாகிய என்னை ஆதரிக்கும் கற்பக விருக்ஷம் போன்ற நீங்கள் இந்த ஸ்வதந்திரம் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது?'' என்று மிகவும் வருத்தத்துடன் கண்ணீர் பெருகியவாறு கேட்டாள்.

இதுபரியந்தம் பதுமைபோல் நின்றுகொண்டிருந்த அந்த அம்மாள், சுற்றுமுற்றும் இப்படிப் பார்த்துவிட்டு, ஒருமாதிரியாக நகைத்து "ஹூம். எனக்கென்ன கர்வமா,பெருமையா,அகம்பாவமா மனஸ்தாபமா, கோபமா, அதிலும் உன்மேலென்ன குற்றமா, குறையா ஒன்றுமில்லை. உலகத்தில் மக்களைப் படைக்கும்போதே அவர்கள் நல்ல மார்க்கத்தில் நன்ருகவாழவேண்டும்;பாவம்செய்யாமல் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்றுதான் ஆறு அறிவை மக்களுக்குக் கொடுத்திருக்கின்ருர். அதைச் சரியான வழியில் உபயோகிக்க வேண்டியது மக்களின் கடமை. அதைச் சில பேர் சரியாக நடத்துகின்ருர்கள். சில பேர் தவறிவிடுகின்ருர்கள். எனக்கு அம்மாதிரி

யாகத் தவற இஷ்டமில்லை. என் தலையெழுத்தை யெண்ணி ஈசுவரத் தியானம் செய்துகொண்டு நான் இருக்கிறேன்'' என்று விடுகதை போலவும், வேதாந்தம் போலவும் பேசினாள்.

இந்தப் பொருளகப்படாமல் கூறிய வார்த்தையைக் கேட்ட பாரதி திகைத்தாள். “அம்மா! நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே! என்னோடு பேசுவதற்கும் பாவம் செய்தவற்கும் என்ன சம்பந்தம்? தயவு செய்து அதை விளங்கச் சொல்லுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

இதைக் கேட்ட அந்த மாது, “ஐயோ பாவம்! உனக்கு எப்படி விளங்கும்? ஒன்று வேதாந்தம் தெரியவேண்டும் அல்லது அநுபவம் தெரியவேண்டும். இரண்டுமில்லாவிடில் என்ன தெரியும்? என் புருஷனும் மாமியும் ரொம்ப ரொம்ப நல்லவர்கள்; ஆனால் ரொம்ப ரொம்ப கெட்டவர்கள். எத்தகைய மனிதருக்கும் நல்லவர்கள்போல நடித்து வேதாந்தம் உலகாநுபவம் இன்னும் மற்ற எல்லாம் சொல்லிக்கொடுப்பது வழக்கம். அது எப்படித் தெரியுமா? உன்னைப்போன்றவர்களைக் கொண்டுவருவதும், அவர்களை அன்பாக உபசரிப்பதும் பிறகு அவர்களைக் கங்காணியிடம் கொடுத்துக் கப்பலேற்றிவிடுவதோ அல்லது யாருக்காவது விற்றுவிடுவதோ, சிறைச்சாலையில் அடைத்துவிடுவதோ இப்படிப் பலவிதமான பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் பாடம் சொல்லித் தருவார்கள். இந்த மூன்றில் உனக்கு எந்த பள்ளிக்கூடமோ தெரியாது'' என்று கபகபவென்று சிரித்தாள்.

வெடிகுண்டுபோன்ற இந்த வார்த்தைகளைக்கேட்டவுடன் பாரதி அபாரமான திகிலையடைந்து “ஐயோ! இத்தகைய படுமோசம் செய்வதற்கா நம்மைக் கொண்டுவந்திருக்கின்றார்கள்? ஆகா! கங்காணிகள் என்ற பதத்தை நாம் எத்தனையோ இடங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம்; பத்திரிகைகளிலும் படித்திருக்கிறோம். இத்தகைய பயங்கரத்தில் அகப்பட்டுக்கொள்வதொன்றுதான் என் பிழைப்பிற்கு மிச்சமா? நல்ல வேளை இப்பவாவது இந்த மாதிடம் பேசி விஷயத்தைத் தெரிந்துகொள்வதற்கு நல்ல புத்தியையும், தைரியத்தையும் கொடுத்தானே'' என்று தனக்குள் சந்தோஷத்தை யடைந்து அந்த அம்

மாளை நோக்கி, "அம்மா! உங்களுக்கு ரொம்ப வந்தனம். உங்களுடைய பர்த்தாவினுடைய செய்கையையே எனக்கு எடுத்துரைத்து என்னைக் காப்பாற்றியதற்கு நான் எவ்விதமான கைம்மாறு செய்வேன்?" என்று கூறிவிட்டுப் பதிலையும் எதிர்பாராது புறக்கடைப் பக்க வழியாக, "ஈச்வரா! இனியாவது என்னை இம்மாதிரியான இடத்தில் அகப்படாமல், நல்ல பாதுகாப்புள்ள இடத்தில் சேர்த்துக் காப்பாற்றுவாயா?" என்று கண்ணீர் பெருகியவாறு விரைவாக நடக்கவாரம்பித்தாள். அவளுடைய மனோவேகத்தில் வழி, துறை ஒன்றும் தெரியாவிடினும் ஏதோ ஒரு பாதையைப்பிடித்துக்கொண்டு "இந்த இடத்தைவிட்டுத் தாண்டினால் போதும்" என்ற எண்ணத்தில் சுமார் இரண்டு மைல் தூரம் நடந்துவிட்டாள். களைப்பு அதிகரித்து கால்கள் துவண்டு, மார்பு படபடத்து, அடித்துக்கொள்ளவும் ஆரம்பித்தன. அப்படியே அவள் ஒரு மரத்தடியில் சற்று உட்கார்ந்தாள். சிலுசிலுப்பான குளிர்ந்த காற்று வீசியது. அக் காற்று வாட்டத்திலிருந்து சமீபத்தில் ஆறோ, ஏரியோ, குளமோ ஏதோ இருக்கலாமென்று தெரிந்துகொண்டாள். தாகத்தினால் நாவரட்சி ஏற்பட்டிருந்ததால் அங்கு சென்று தாகசாந்தி செய்துகொள்ளலாமென்று அந்தப் பக்கம் நடக்க ஆரம்பித்தாள்.

சுமார் ஒரு பர்லாங்கு தூரம் சென்றதும் மனத்திற்கும் காதிற்கும் இனிமையுண்டாக்ககூடிய ரமணீயமான சில தொனிகள் கேட்டன. அதனால் சற்று தெம்பையடைந்து அவள் மீண்டும் வேகமாக நடந்து சென்றாள். முதலில் அவள் நினைத்ததுபோலவே அங்கு ஓர் பிரமாண்டமான ஆறு பால்போன்ற தெள்ளிய நீருடன் சலசலவென்று ஓடிக்கொண்டிருப்பதையும் அவ்வாற்றங்கரையில் 20, 30 பெண்கள் பலவிதமான சிற்றுண்டிகளை வைத்துக்கொண்டு புசித்தவாறு கொம்மாளமடித்துத் தமாஷாகப் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பதையும் கண்ட பாரதிக்கு அவளை மீறி மெய்ம்மறந்த ஆனந்தமுண்டாயிற்று. "ஆகா! இத்தகைய பரந்த உலகத்தில் நான் ஒருத்திதானா பாபியாயிருக்கிறேன்! என்னைப்போன்ற இளஞ் சிறுமிகள் எத்தனை ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்கின்றார்கள்! உம். அவரவர்கள் செய்த பாப புண்ணியத்திற்குத் தக்கபடி பலனை யடைகின்றார்கள். ஆனந்த

மயமாக இருக்கும் அவர்களின் முன்னிலையில் நான் சென்றால் அவர்கள் என்னைக்கண்டு பரிசகிக்கமாட்டார்களா? ஹூம், கடவுளே பரிகசிக்கும்படியான இங்கிலையில் என்னை வைத்திருக்கையில், இம் மனிதர்கள் பரிகசிப்பதில்தானா வந்துவிட்டது.'' என்று தனக்குள் ஒருவித தைரியமான முடிவைச் செய்துகொண்டு, ஆற்றுத் தண்ணீரை அருந்துவதற்கு அப்பக்கம் சென்றாள்.

வேஷத்தில் ஏழ்மையாயும், விசனத்தால் வாடிக் குன்றிப் போயிருந்தாலும், இயற்கையாக ஈச்வரன் அவளுக்குக் கொடுத்திருக்கும் அழகு தங்கப் பதுமைபோலப் பிரகாசித்தது. அவ்வாற்றில் இரண்டு கை தண்ணீரைக் குடித்துவிட்டு அந்தக் கரையிலேயே நின்று, அங்கு உல்லாசமாக இருக்கும் ஆநந்தஸ்வரூபிகளை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அங்குள்ள பெண்களெல்லோரும் வன தேவதையோ என்று ஐயுறும் வண்ணம் நின்று தங்களைப் பார்க்கும் பாரதியைக் கண்டு வியப்புற்று 'இது யார்? மிகவும் அழகாக ஒரு பெண் இருக்கின்றாளே. திடீரென்று ஒருவித சந்தடியுமின்றி இப்பாவை இங்கு எப்படித் தோன்றினாள்? இங்கு சமீபத்தில் மனிதர் நடமாட்டம் இருப்பதாகவே தெரியவில்லையே!'' என்று தங்களுக்குள் ஐயமுற்றுப் பிரமித்து, தங்களுடைய தலைவியிடம் பாரதியைச் சுட்டிக் காட்டினார்கள்.

சுமார் 55 வயது மதிக்கக்கூடிய அந்தம்மாள், பாரதியை உற்றுக் கவனித்தாள். இதற்குள் அங்குள்ள சிறுமிகளெல்லோரும் ஒருவருக்கொருவர் திடீரென்று இங்கு ஒரு பெண்ணுருவம் தோன்றுவதென்றால் பேயோ, பிசாசோ, வன தேவதையோ, காற்றில் உலாவும் கன்னிப் பெண்ணோ! ஒன்றும் புரியவில்லையே!'' என்று குசமசவென்று பேசிக்கொண்டார்கள்.

இதைக் கேட்ட தலைவி நகைத்துக்கொண்டே, "குழந்தைகாள்! நீங்கள் படிக்கும் படிப்பெல்லாம், உங்களுக்குப் போதிக்கும் போதனை எல்லாம் உங்களைப்போன்ற ஒரு பெண்ணுருவத்தைப் பார்த்து பீதியடைந்து மருண்டு பலவிதமாகப் பேசக்கூடிய கோழைத் தன்மையான பலனையா கொடுத்தது? பேஷ். வெகு அழகு. நீங்கள்

நினைக்கிறபடி அவள் பேயும் அல்ல; பிசாசும் அல்ல; மோகினி தேவதையும் அல்ல. ஐயோ, பாவம்! கண்ணீர் ஆறுப் பெருகுகின்றது பாருங்கள். ஏதோ அபாரமான துக்கத்தினால் தேகம் குலுங்கப் புலம்புகின்றாள் பாருங்கள். பார்த்தால் இளம் பெண்ணாக இருக்கின்றாள். என்ன கொடுமையோ! வழி தவறி வந்துவிட்டாளோ அல்லது யாரேனும் துஷ்டர்கள் கொண்டுவந்து விட்டார்களோ! என்ன காரணமோ பாவம். நீங்கள் இப்படியே இருங்கள். நான் அருகில் போய் விசாரித்து வருகிறேன்.'' என்று கூறிவிட்டு பெருந்தன்மையுடனும் தயாள குணத்துடனும் பாரதியின் அருகில் வந்து, "அம்மா! நீ யாரு? தனிமையாய் நீ இங்கு எப்படி வந்தாய்? உன்னுடன் யாரேனும் வந்திருக்கின்றார்களா! அல்லது யாரையேனும் தேடிக்கொண்டு வந்தாயா? உனக்கு என்ன வேண்டும்? ஏன் புலம்புகின்றாய்?'' என்று அன்பொழுகக் கேட்டாள்.

இதைக் கேட்ட பாரதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. திடீரென்று அந்த அம்மாளின் காலில் விழுந்து காலைப் பிடித்துக் கொண்டு, "தாயே! நான் ஒரு அநாதைப் பரதேசி; திக்கற்ற பிணம். இவ்வுலகத்தில் துரதிர்ஷ்டம் செய்தவர்கள் யாரேனும் இருக்க வேண்டுமென்றால் அது என்னைத் தவிர வேறு ஒருவருமே இருக்க மாட்டார்கள். தாங்கள் கேட்டபடி என்னுடன் யாரும் வரவுமில்லை. வருவதற்கு யாரும் மனிதரும் இல்லை; மக்களும் இல்லை. ஆகாய வாணியும் பூமாதேவியும்தான் எனக்குத் துணை. அந்தத் துணையைக் கொண்டுதான் நான் பித்துப் பிடித்தவள்போல் வந்துகொண்டிருக்கிறேன். மனித ரூபமாக என்னை ஆதரிக்க யாரையேனும் காட்டமாட்டாயா என்று கடவுளை வேண்டிக்கொண்டிருக்கிறேன். தாங்கள் யாரோ? அந்த ஆநந்த ரூபிகளாகிய சிறுமிகள் யாரோ? கோரப் பாபியாகிய எனக்கு ஒரு ஆதரவு கொடுக்கவேண்டும்'' என்று தன்னுடைய வரலாறுகளை சுருக்கமாகக் கூறிப் புலம்பினாள்.

மகா பரிதாபகரமான இக் காட்சியைக் கண்டு மனமுருகிக் கண் கலங்கிய தலைவி, பாரதியைத் தூக்கி நிறுத்தி 'குழந்தாய்! வருந்தாதே. உலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவரும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் சம பங்காளிகளாகப் பிறக்கின்றார்கள். இன்பமும்

துன்பமும் இரவும் பகலும்போல என்ற தத்துவத்தை ஒவ்வொரு மக்களும் அறிந்து தெரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இன்பமென்றால் உயர்வு துன்பமென்றால் தாழ்வு என்ற வித்யாசம் தெரியாமல் சமமாகப் பாவிக்கும் ஓர் தனி சக்தி உண்டாகும். அந் தத் தனி சக்தி உண்டாகப்பெற்ற எவரையும் எவ்விதமான துன்ப மும் பாதிக்காது. மனித வாழ்க்கையில் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய ரகஸியம் இதுதான்.

குழந்தாய்! உம். அச் சிறுமிகளை ஆநந்தஸ்வரூபம் என்று நீ நினைக்கிறாய். அவர்களும் ஒரு காலத்தில் உன்னை விட அதிகமான துன்பத்தில் துளைந்து தற்போது சிறிது கரைகண்டிருப்பதாகப் பாவிக்கக்கூடியவர்கள்தான். எல்லோரும் கடவுடளின் கீழ்க்குடியே அல்லாது தன்கீழ் தான் குடி என்பது கிடையாது. ஆகையால், எந் தெந்த காலத்தில் எப்படி எப்படி அவன் ஆக்ஞை இடுகின்றானோ அந்தந்த காலத்தில் அனுபவித்துத்தானே தீரவேண்டும். அஞ்சாதே. எத்தனை துயரங்கள் வந்தபோதிலும் அவனை மறவாதே. உனக்கு ஒரு துணை வேண்டுமென்று கடவுளை வேண்டியதாகத் தெரிவித் தாயே அந்தத் துணைவியாக என்னையே கடவுள் உனக்கு அனுப்பி யிருப்பதாக எண்ணி மனம் தேறு.

சமீபத்தில் சிறிய கிராமம் ஒன்று இருக்கின்றது. அந்தக் கிராமத்தில் அனாதைச் சிறுமிகளுக்கென்று ஓர் ஆலயம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அவ்வாலயத்தின் மாணவிகள் இச் சிறுமிகள். இவர்களைப் பாதுகாக்கும் தொழிலுடையவள்தான் நான். ஆகை யினால் நீ கவலைப்படாமல்,இப்பொழுதே எங்களோடுகூட வந்துவிடு'' என்று மிக நயமாகவும், அன்பாகவும் கூறி பாரதியைத் தேற்றி அழைத்து வந்து, சிற்றுண்டிகளை அவளுக்கும் கொடுத்து புசிக்கச் செய்தாள்.

இதைக் கேட்ட பாரதி பிறவிக் குருடனுக்கு இரண்டு கண் களும் வந்துவிட்டதுபோன்றும், அஷ்ட தரித்திரனுக்கு அஷ்ட ஐச்வரியமும் கிடைத்ததுபோன்றும் பரம சந்தோஷத்தை அடைந்து உள்ளம் பூரித்தாள்: இந்த இடத்திலாவது ஒருவித களங்கமுமின்றி

தன் காலத்தைக் கடத்த கிருபை செய்யவேண்டுமென்று ஈசனைத் துதித்தாள். அச் சிற்றுண்டியைப் புசித்துப் பசியாற்றிக்கொண்டு அவர்களோடு இவளும் கலந்துகொண்டாள்.

இதற்குள் பொழுது சாயும் நேரமாய்விட்டது. அங்கு வீற்றிருந்த எல்லோரும் சிறிது நேரம் தமாஷாகப் பாட்டுப் பாடுவதும், அங்கும் இங்கும் ஓடி ஆடி விளையாடுவதும் கும்மி யடிப்பதுமாக இருந்துவிட்டுத் தங்கள் ஆச்ரமத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். இப் பெண்கள் நான்கு பேர்கள் ஒவ்வொரு வரிசையாக அழகான சிப்பாய்களைப்போல நடந்துகொண்டு அருமையான பாட்டுகளை பாடிக்கொண்டு பஜனை வருவதுபோல சுமார் ஒரு மைல் தூரம் நடந்து சென்று ஆச்ரமத்தை அடைந்தார்கள்.

நமது பாரதி துன்ப வாழ்க்கைகளை தவிர இன்ப வாழ்க்கையைக் கனவிலும் கண்டறியாதவளாதலால் இந்த ஆச்ரமத்தைப் பார்த்ததும் அதன் திட்டங்களும், அதன் மாணவிகளின் குதூகுலமும் ஒன்றுகூடி பாரதியைப் பிரமிக்கச் செய்தன. இப் பேதைப் பெண்ணிடம் தலைவி மிக்க பிரீதியுடன் நடந்துகொண்டு ஆச்ரமத்தின் விதிகளை யெல்லாம் தெரிவித்தாள். அதாவது விடியற்காலம் நான்கு மணிக்கெல்லாம் ஒரு மணி அடிக்கும். அப்போது எல்லோரும் எழுந்து விடவேண்டும். காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நாலரை மணிக்கெல்லாம் கடவுள் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஐந்து மணியிலிருந்து ஆறு மணி வரையில் எல்லோரும் தங்கள் உடைகளைத் தோய்த்துக்கொண்டு, ஸ்நானம் செய்தபின் காலை ஆகாரம் அருந்திவிட்டு அவரவர்களுக் கேற்பட்டுள்ள பாடங்கள், கைத்தொழில், தோட்ட வேலைகள், சித்திர வேலைகள் முதலிய பல பிரிவுகளான வேலைகளைச் செய்யவேண்டும். சரியாகப் பத்து மணி அடித்தவுடன் போஜனம் செய்துவிட்டு அவரவர்கள் வகுப்பிற்குச் சென்று பாடம் படிக்கவேண்டும். பிற்பகல் நான்கு மணி வரையில் வகுப்புகள் நடக்கும்.

அதன்பிறகு ஒவ்வொருவரும் சுத்தமாகக் குளித்துவிட்டு தோட்டத்தில் விளையாடுவதோ அல்லது தமக்கு எப்படி இஷ்டமோ

அப்படி ஐந்து முதல் ஆறு வரையில் உல்லாஸமாக இருப்பதும் ஆறு மணிக்குமேல் ஏழு வரையில் கடவுள் பிரார்த்தனையும், அதற்குப் பிறகு எட்டு மணிக்குச் சாப்பாடு, ஒன்பது மணி வரையில் படிப்பு, ஒன்பதரைக்கு எல்லோரும் நித்திரை செய்வார்கள். இவ்வளவு தான் ஆச்ரம விதிகள். இவ்விதிகளைத் தெரிந்துகொண்ட நம் பாரதி அளவற்ற சந்தோஷத்தை அடைந்தாள். முதல் இரண்டு மூன்று நாளைக்குள்ளேயே ஆச்ரமத்தின் வாழ்க்கை பாரதிக்குப் பிடித்துவிட்டது. அங்குள்ள எல்லோருடைய அன்புக்கும் பிரீதிக்கும் பாரதி பாத்திரமாய்விட்டாள். தலைவி தனக்கிட்ட கட்டளையை வெகு ஒழுங்காகச் செய்து முடிக்கும் ஆற்றலையும் பெற்றாள்.

இவ்வாச்ரமத்திற்கு முக்கியமான சில உயர்ந்த பத்திரிகைகள் மட்டும் வருகின்றன. அப் பத்திரிகைகளைத் தலைவி படித்த பிறகு படிக்கப் பிரியப்பட்டவர்கள் மாலை தமக்கு ஒய்வு நேரங்களில் படிப்பார்கள். நமது பாரதி படிப்பதில் மிகவும் ஆவலுள்ளவளாகையால் மாலையில் பத்திரிகை படித்து உலக விஷயங்களைத் தெரிந்துகொள்வதில் சந்தோஷப்பட்டாள்.

ஒரு தினம் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருக்கையில் அதில் ஒரு உருவப் படம் இருப்பதைக் கண்டு பிரமித்து, ஆச்சரியமுற்று அதை உற்று நோக்கினாள். அப் படத்தின் கீழ் பந்தாட்ட வீரன் (Cricket Champion) ராஜசேகரன் என்று வரைந்திருப்பதைப் பார்த்து ஸ்தம்பித்துவிட்டாள். "ஹா! என்ன ஆச்சரியம்! நான் கனவிலும் கருதாமல் என் காதலன் உருவப்படத்தைக் காணும் பாக்யம் கிடைத்ததே. எந்த இடத்தில் ஜயித்து வெற்றிபெற்றானென்பதைப் படிப்போம்" என்று அதற்குக் கீழ் எழுதியிருக்கக்கூடிய விஷயத்தைப் படிக்கத் துடங்கினாள்.

## ரயில்வே ஸ்டேஷனில் கோரமான விபத்து

என்ற தலையங்கத்தைப் படித்தவுடன் முன்பு க்ஷண நேரம் அடைந்த இன்பமெல்லாம் கண நேரத்தில் மறைந்து திடுக்கிடச் செய்தது. "என்ன! விபத்தா! யாருக்கு! என்ன விபத்து!" என்று

தனக்குள் தடுமாறித் தத்தளித்தவண்ணம் மீண்டும் கீழே படிக்கத் துடங்கினுள்.

"பந்தாட்டத்தில் மகா சூர நிபுணத்வம் வாய்ந்த வீரன் ராஜசேகரன் அவர்கள் வாணீபுரம் ரயில்வே ஸ்டேஷனில் ஏதோ அபர்ரமான வருத்தத்துடன் யாரையோதேடிக்கொண்டு தன்னை மறந்து பித்துப் பிடித்தவர்போல் ஓடுகையில் எதிரில் இருந்த இரும்புத் தூணில் சடாரென்று மோதி, நெத்தியிலும், மண்டையிலும் பலத்த அடி பட்டு மூர்ச்சித்து விழுந்துவிட்டாராம். உடனே அங்கிருந்தவர்கள் அவரை அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள். ஆஸ்பத்திரியில் பலமான சிகித்ஸை நடந்துவருகின்றது. அவருடைய நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிகின்றது. ஈச்வரன் கிருபையால் அவருக்குச் சீக்கிரம் குணமடைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.''

என்பதைப் படித்தவுடன் பாரதிதன் தலைமேல் எரிமலையே புரண்டுவிட்டதைப்போன்ற வேதனை யடைந்து, அப்படியே கண்களை மூடிக்கொண்டு துவண்டு கீழே விழுந்தாள்.

## 18-வது அதிகாரம்

## ஏழைக்கு உதவுதல் ஆழியினும் பெரிதே!

உலகத்தில் பிறந்த எல்லா மக்களும் இன்பத்தை விடத் துன்பத்தையே தமக்குத் தெரிந்தும் தெரியாமலும் அதிகமாக அனுபவிக்க நேரிடுகிறது. இன்பத்தைக் கண்டால் பல்லிளித்துப் பூரிப்பதும், துன்பத்தைக் கண்டால் நடுங்கி, அஞ்சி, பயந்து அப்பா என்று கதறுவதும் உலக

இயல்பாகிவிட்டது. நமது கோகிலத்தின் தகப்பனுரான கோதண் டம் சுகமான கிராம வாழ்க்கையில் ஈடுபட்டு, பயிரே தனது உயிர் என்று எண்ணி சந்தோஷமாக ஜீவித்து இருக்கையில் போலீஸார் தன்னைக் கைதியாக்கி யிருப்பதாகச் சொன்னதைக் கேட்டவுடன் எப்படி அஞ்சாமலும் பதருமலும் இருக்கமுடியும்?

போலீஸார் வாயிலிருந்து வந்த வார்த்தையைக் கேட்டதும் சில விஞடிகள் ஸ்தம்பித்தார். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, அவர்களை நோக்கி, "என்னய்யா, ஆள் மாருட்டமாக அல்லது வீடு மாருட்டமாக வந்திருக்கின்றீர்களா? கொலைக்காரியாவது அல்லது கொலைக்காரியை ஒளித்து வைத்திருப்பதாவது? இம்மாதிரியான அடாத வார்த்தைகளையெல்லாம் சொல்லாதீர்கள். இந்த கிராமத் திற்குள் நான் ஒரு மிராசுதார் போன்றவன். என்னுடைய செல் வாக்கை அறியாமல் அநியாயமாய்ப் பேசாதீர். வெளியே செல் லுங்கள்" என்று ஆத்திரத்துடன் கூறினர்.

இதைக் கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் மிகவும் அலக்ஷிய மாகப் பேசத் துடங்கி, "தெ, போதுமையா உம்முடைய மிராசுதார் பெருமை. நீர் மிராசுதார் ஆனல் எங்களுக்கென்ன அல்லது ஜமீந் தாரானல் எங்களுக்கென்ன? எங்களுடைய சட்டதிட்டத்தின் படி, அதிகாரிகளின் உத்திரவுப்படி நாங்கள் செய்கின்றோம். நீர் குற்றவாளி இல்லையென்ருல் அதைப் பகிரங்கமாக ருசுப்படுத்திக் கொள்ளும். எங்களுடைய கடமையை நாங்கள் செய்துதான் தீரு வோம். எங்கள் அதிகாரியின் உத்திரவு இதோ இருக்கின்றது பாரும். ஏற்கெனவே நாங்கள் இந்தக் குற்றவாளியைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என்று பத்திரிகைகளிலெல்லாம் பிரசுரித்திருக்கையில் நீர் அவளை எப்படி ஆதரிக்கலாம்? உம். நேரமாகின்றது. கூப்பிடும் அந்தம்மாளை. வாரும் வெளியில்" என்று தமது போலீஸ் அட்டகாஸத்துடன் கூறினர்.

இதைக் கேட்ட கோதண்டம் 'அய்யா! உங்கள் அட்டகாச முறைகள் எல்லாம் இருக்கட்டும். நான் படித்துப் பட்டங்கள்

பெற்றவன் அல்ல. நான் இக் கிராமத்தில் வயல் வேலை பார்த்துக் கொண்டு காலம் தள்ளுபவன். ஆகையினால் நீங்கள் எந்தப் பத்திரிகையில் என்ன எழுதினீர்களோ, ஒன்றும் தெரியாது. யாரோ ஒரு அனாதைப் பெண் பசியோடு வந்தாள்; அவளை அன்னமிட்டு ஆதரித்தோம். இவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். பசியோடு வந்தவர்களுக்கு அன்னமிடுவது குற்றமென்பதை நான் எந்த தர்ம சாஸ்திரத்திலும் கேட்டதில்லை '' என்று பேசிக்கொண்டே இருக்கையில் இந்தக் குழப்பத்தையும், வீதியில் கூட்டமாக இருப்பதையும் உள்ளே யிருந்து கவனித்த கோகிலத்தின் தாயாரும், காமுவும் திடுக்கிட்டு வேகமாக வீதியில் ஓடி வந்தார்கள்.

இவர்கள் வந்தவுடனே, அங்கு நின்றிருந்த பொன்னுசாமி 'அதோ வருகின்றாளே, அவள் தான் அந்தக் காமு என்பவள்! கொலை செய்தவள்; உங்களுக்குக் காட்டிவிட்டேன்!' என்று பெரிய வெடி வெடித்ததுபோலக் கூறிய குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்த காமுவுக்குத் தீயை மிதித்ததுபோலாகிவிட்டது. "ஐயோ! இப்படுபாவி இங்கும் வந்துவிட்டானா!' (கோகிலத்தின் தாயாரை நோக்கி) "அம்மணி! இதோ நிற்கும் இந்தச் சண்டாளன்தான் என்னை இக் கதிக்கு ஆளாக்கினவன். அன்று என்னுடைய சரித்திரத்தை எடுத்துச் சொன்னேனே அந்த மகா கொடிய பாதகன் இவன்தான். என்னை ஒருத்தி மட்டுமல்ல; உலகத்தில் எத்தனையோ பெண்களை இவன் ஹதம் செய்திருக்கின்றான். என் ஜீவியத்தைப் பாழ் செய்ததுமட்டும் போதாமல் என்னையும், இப் பச்சைக் குழந்தையையும் அடியோடு தீர்த்துத் தலை முழுகிவிடவேண்டுமென்று இன்னும் ஏதோ சதியாலோசனை செய்துகொண்டு வந்திருக்கின்றான். ஐயோ! நான் என்ன செய்வேன்? என் அங்கம் பதறுகின்றதே. ஆவி சோருகின்றதே '' என்று கதறிப் பதறி கோகிலத்தின் தாயாருடைய காலில் விழுந்து பிடித்துக்கொண்டாள்.

கோகிலத்தின் தாயாராகிய கோதாவரி அம்மாள் அங்கு நடக்கும் விஷயம் யாவற்றையும் விசாரித்து அறிந்துகொண்டாள். பொன்னுசாமி, காமுவை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று அவள்மீது கொலைக் குற்றத்தைச் சாற்றி தூக்கு மேடையில் தொங்

கும்படியாகச்செய்துவிட்டால்,தன் ஊழலெல்லாம் மறைந்து தப்பித்துக்கொள்ளலாம் என்கிறதாக எண்ணம் கொண்டுதான் ஒன்றையும் அறியாதவன்போல் நடித்து போலீஸாருக்கு அவளைப் பிடித்துக் கொடுத்து அந்த ஆயிரம் ரூபாயை அபகரித்துக்கொள்ளும் பொருட்டுச் செய்த சூழ்ச்சி இது என்பதை மகா யூகசாலியான கோதாவரி அம்மாள் ஒரு நிமிடத்தில் அறிந்துகொண்டாள்.

சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக, காமுவையும் குழந்தையையும் வீட்டில் வைத்துக்கொண்டு பழகிவிட்டதனால் அவளிடத்தில் பச்சாத்தாபமும் உறுதியான நம்பிக்கையும், தன்னையறியாத ஒரு பாசமும் விழுந்துவிட்டன. அவளை ஆதரித்ததன் பலனாகத் தன் புருடனுக்கும், பேராபத்து வந்துவிட்டதே என்ற விகல்பமான எண்ணம் அவள் மனதில் உதித்துக் காமுவின்மீது கோபம் வரவில்லை. தர்ம வழியில் தாங்கள் வேலை செய்திருக்கையில், அது எப்படி அதர்மமாகக்கூடும்? இந்த சந்தர்ப்பம் தர்மத்திற்கு ஜயம் உண்டு என்பதை ஒரு கை பார்த்தே தீருவது என்று வீராவேசத்துடன் ஒரு முடிவு கட்டிக்கொண்டாள்.

அங்கு நடக்கும் முழு விவரங்களையும் அறியாவிட்டாலும் தன் தகப்பனார் கலக்கமடைந்திருப்பதையும், காமு புலம்புவதையும், தன் தாயார் அபாரக் கோபத்துடனிருப்பதையும், அங்கு போலீசார் செய்யும் அட்டகாசத்தையும் கண்ட சிறுமி கோகிலத்துக்குக் கதி கலங்கிப் பிரமித்துப் போய்விட்டது. தன் தாயை நோக்கி, "அம்மா! இது என்ன? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. போலீஸார் என்ன சொல்கின்றார்கள்? அக்கா ஏன் அழுகின்றாள்? அப்பா ஏன் இப்படி இருக்கின்றார்? அக்காவையும் குழந்தையையும் அவர்கள் அழைத்துக்கொண்டு போய்விடுவார்களா என்ன? சொல்லம்மா. குழந்தையை நான் விடமாட்டேன். நான் கொடுக்கவேமாட்டேன். அது என் கண்மணி. அது என் ராஜாத்தி. இக்குழந்தை நம்ம வீட்டிற்கு வந்த வேளை எவ்வளவோ மங்களகரமாய் இருக்கிறதென்று சொன்னாயே! அதனால் குழந்தைக்கு மங்களவல்லி என்று பெயரிட்டாயே. அப்படிப்பட்ட குழந்தையை வீட்டை விட்டு அனுப்பிவிட்டால் நல்லதா அம்மா? ஹூஹூம். நான் கொடுக்கவேமாட்டேன்." என்று கூறிக்கொண்டே குழந்தையைக் கட்டி அணைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

கோதாவரி அம்மாள் காமுவைத் தூக்கி நிறுத்தித் தேத்தாவு செய்து, "அம்மா! நீ கவலைப்படாதே. உனக்கு நான் அன்று கொடுத்த வாக்கை மறக்கமாட்டேன். என் உடன்பிறந்த சகோதரி என்று நன்மையோ தீமையோ கடைசிவரையில் போராடியே தீருவேன். நான் இதுகாறும் பட்டிக்காட்டு ஆசாமியாக அடுப்பங்கரையிலே தூங்கி யிருந்தபோதிலும் சமயம் வந்தபோது அதைக் கைவிடப் போவதில்லை. உன்னை அவர்கள் கைது செய்து அழைத்துச் சென்றாலும் உன் குழந்தையைக் கண்மணிபோன்று நானும் என் கோகிலமும் காப்பாற்றுவதோடு உன்னையும் விடுவிக்க ஆனவரையில் முயற்சி செய்கிறேன். கடவுளை நம்பிப் பிரார்த்தனை செய்துகொண்டு இரு. இந்த அற்பப் பதரின் கதி என்னகப் போகிறதென்பதைக் கடவுளே காட்டிவிடுவார்" என்று கூறிவிட்டுத் தன் புருஷனைப் பார்த்து,

"நாதா! நீங்கள் கவலைப்படவேண்டாம். நீங்கள் கடவுளை இடைவிடாது தியானம் செய்யும் பரம பக்தன் என்பதை அவன் அறிவான். அவன் ஒரு குறைவும் உங்களுக்கு விளைவிக்கமாட்டான். இப் பேதைப் பெண்ணை ஆதரித்ததனால் அல்லவோ நமக்கு இக்கதி வந்ததென்று மனதில்கூட நினைக்காதீர்கள். சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் என்றும் அழிவில்லை என்ற தர்மத்தை மறக்காதீர்கள். நீங்கள் நிரபராதி என்பதை அப் பரந்தாமனின் துணைகொண்டு நான் நிரூபித்து வைக்கிறேன். நீங்கள் அஞ்சவேண்டாம். இப் பெண்மணி குற்றமற்ற நிரபராதி என்பதை என் உள்ளம் அறியும். அதை நான் பரிபூர்ணமாக நம்புகின்றேன். கர்மம் யாரை விட்டது. அதை அனுபவிக்கவேண்டிய வேளை இப்பொழுது. ஐயோ பாவம்! நம்மை அண்டிய அனதை அவளை நாம் கைவிட்டுக் காட்டிக்கொடுத்து விட்டோமானல் நாளை நம்மைக் கடவுள் காட்டிக் கொடுத்துவிடுவார். நம்முடைய அருமைக் கண்மணி கோகிலாவுக்கு சதா ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய அந்தக் குழந்தையை நான் பிரிக்கமாட்டேன். அவளுடைய இன்ப வாழ்க்கை அல்லவோ நம்முடைய உயிர்நிலை. ஆகையினல் நீங்கள் ஒரு சிறிதும் கவலைப்படவேண்டாம்." என்று வெகு தைரியமாகவும், என்றும் கண்டறியாத ஓர் நூதன உணர்ச்சியுடனும், வீராவேசத்துடனும் கூறினள்.

பிறகு போலீஸாரைப் பார்த்து, 'ஐயா! நீங்கள் இப்பொழுது என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்?" என்று தைரியமாய்க் கேட்டாள். இதைக் கேட்ட போலீஸார், 'அம்மணி! இதோ எங்கள் அதிகாரியின் உத்திரவுச் சீட்டு. இதோ நிற்கும் அந்த அம்மாளும் அவள் தாயாரும் சேர்ந்து இவர்களுடைய ஒரு பரம ரகஸ்யத்தை மூடி வைக்கும்பொருட்டு, இவர்களுடைய சொந்த மனுஷியான ஒரு கிழவியைக் கொலை செய்துவிட்டார்கள். இவளுடைய தாயாரைச்

சிறையிலடைக்கப்பட்டிருக்கிறது. இந்த அம்மாளை இதுகாறும் தேடி யலைந்தோம். இன்று இவரால் கண்டுபிடிக்கப்பட்டாள். இத் தகைய கொலைக்காரியை உங்கள் வீட்டில் வைத்து ஆதரித்து மறைத் ததற்காக உங்கள் பர்த்தாவையும் சேர்த்துக் கைதியாக்கப்போகி றோம்'' என்றார்கள்.

இதைக் கேட்ட காமு 'என்ன! என்ன! நானும் என் தாயா ரும் ஒரு கிழவியைக் கொன்றுவிட்டோமா? என் தாயார் அதற்கா கச் சிறையிலிருக்காளா? ஐயோ கடவுளே! ஐயோ சோதனையே! என் வேதனைக்கோர் எல்லை கிடையாதா?'' என்று புழுவெனத் துடித் தாள்.

கோதாவரி அம்மாள் 'போலீஸாரை நோக்கி, "சரி உங்களு டைய கட்டளைப்படி நீங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு போங்கள். எல்லோருக்கும் மேலே ஒருவன் உங்களையும் எங்களையும் மற்ற எல்லாரையும் இடைவிடாமல் பார்த்துக்கொண்டே இருக்கி றான். இவ் வழக்கின் தீர்ப்பு அவன் கையிலிருக்கிறது. அவரவர் களின் பலாபலன்களுக்கேற்றவாறு நடக்கும். நாதா! தைரியமாகச் செல்லுங்கள்.' என்று கூறிவிட்டுக் காமுவை நோக்கி, "காமு! வருந் தாதே. குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்கின்றேன். உன்னையும் என் பர்த்தாவையும் விடுவிக்கவேண்டிய முயற்சியை நான் இந் நிமிடம் முதல் எடுத்துக்கொள்கின்றேன். நீ கவலையே படாதே. இதுவரையில் இம்மாதிரியான தைரியத்தை நான் அடைந்ததேயில்லை. நல்ல காலத்திற்கோ கெட்ட காலத்திற்கோ எனக்கு இப்பொழுது இம்மாதிரியான தைரியம் உண்டாயிருக் கிறது. ஆகையினால் இதைப்பற்றி நான் ஒரு முயற்சி யெடுத்துக் கூடியதைச் செய்தே தீருகிறேன்'' என்று தேற்றினாள்.

அதே சமயம், காமுவையும், கோதண்டத்தையும் போலீஸார் அழைத்துச் செல்லப் புறப்பட்டார்கள். உள்ளேயிருந்த கோகிலம் அழுதுகொண்டே ஓட்டமாக வீதியில் வந்து, "அம்மா! இது என்ன இது! அக்காவையும் அப்பாவையும் எங்கே அழைத்துக்கொண்டு போகிறார்கள்? என் அம்மா அவர்கள் போகின்றார்கள். அப்பா! அக்கா! வாருங்கள். நீங்கள் எங்கே போகிறீர்கள்?வாருங்கள்.அம்மா! அவர்களைக் கூப்பிடேன்'' என்று குழந்தை முறையில் பெரிய சத்த மிட்டுக் கதறுகிறாள். இதைக் கண்ட அவள் பிதாவுக்கு விசனம் தாங்கமுடியவில்லை. தவங்கிடந்து பெற்ற தன் புதல்வியின் மனம் பதைப்பதைக் கண்டு அவரும் சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுகின்றார். 'அம்மா கோகிலம்!' என்கிறார். அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS,

# தி யுனைடெட் இந்தியா

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : மதராஸ்.) (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

**2½ கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள்.**
**60 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.**
**14 லக்ஷத்திற்கும் மேலாகவே**
**வருட வருமானம்.**

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமத மின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்.
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது
வருஷங்களுக்கு
மேலாக
முன்னணியில்
நிற்கின்றது.




மற்றவைகள்
இதைப்
பின்பற்றித்தான்
வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

---

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.